|| ஸ்ரீஹரி: ||

568▲

சரணாகதி

शरणागति (तमिल)



गीताप्रेस गोरखपुर
GITA PRESS, GORAKHPUR

சுவாமி ராம்ஸுகதாஸ்

॥ ஸ்ரீஹரி: ॥

568

சரணாகதி

शरणागति (तमिल)

ஸர்வத₄ர்மாந்பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ ।
அஹம் த்வா ஸர்வபாபேப்₄யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச: ॥
(ஸ்ரீமத் பகவத்கீதை 18/66)

'ஸ்ரீமத் பகவத்கீதையின் ஸாரம் எனக் கூறப்பெறும், மேற்குறித்த சுலோகத்தின் உட்பொருளாகிய *சரணாகதி* கோட்பாட்டிற்கு விரிவுரை'

த்வமேவ மாதா ச பிதா த்வமேவ
த்வமேவ ப₃ந்து₄ஶ்ச ஸகா₂ த்வமேவ ।
த்வமேவ வித்₃யா த்₃ரவிணம் த்வமேவ
த்வமேவ ஸர்வம் மம தே₃வதே₃வ ॥

ஆருயிர் அன்னையும் நீயே, அருமைத் தந்தையும் நீயே,
உறவும் சுற்றமும் நீயே, உற்ற நண்பனும் நீயே,
கற்கும் கல்வியும் நீயே, சேர்க்கும் செல்வமும் நீயே,
அனைத்தும் ஆன என்றன் ஆதிதேவனும் நீயே!

ஆக்கியோர்
சுவாமி ராம்ஸுகதாஸ்

Books are also available at—

1. Gita Press Sales Depot
   Gita Press Mansion, 8/1M, Racecourse
   COIMBATORE — 641018
   © 0422-3202521
2. Gita Press Gorakhpur Book Shop
   Electro House N0. 23
   Ramanathan Street, Kilpauk
   CHENNAI — 600010
   © (044) 26615959; Fax 26615909

Fourteenth Reprint 2015 3,000

Total 65,000

❖ **Price : ₹ 6**

(Six Rupees only)

Printed & Published by :

Gita Press, Gorakhpur—273005 (INDIA)

(a unit of Gobind Bhavan-Karyalaya, Kolkata)

Phone - (0551) 2334721, 2331250 ; Fax - (0551) 2336997
e-mail : **booksales@gitapress.org** website : **www.gitapress.org**

II ஸ்ரீஹரி: II

தேவநாகரி எழுத்துக்கள் — சில குறிப்புகள்

ஒரு மொழியின் சொல்லை இன்னொரு மொழியின் எழுத்துக்களால் எழுதுவதை 'எழுத்துப்பெயர்ப்பு' **(Transliteration)** என்று அழைக்கிறோம். ஒரு மொழியிலுள்ள சொல்லின் பொருளை மற்றொரு மொழியில் கூறுவதை **'மொழிபெயர்ப்பு' (Translation)** என்று அழைக்கிறோம்.

சம்ஸ்கிருதச் சொற்களைப் பிழையின்றி உச்சரிக்க, முறையாக சம்ஸ்கிருதம் கற்றவர்களிடமிருந்து அறிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும்.

ஆங்கில எழுத்துக்களின் துணைகொண்டு 2, 3, 4 என்னும் குறியீடுகளுடன் சம்ஸ்கிருத எழுத்துக்களுக்கு நிகரான தமிழ் ஒலி வடிவங்கள் இங்கு தரப்பட்டுள்ளன.

अ அ	आ ஆ	इ இ	ई ஈ	उ உ
ऊ ஊ	ऋ ரி	ॠ ரீ	ॡ ல்ரு	ए ஏ
ऐ ஐ	ओ ஓ	औ ஔ		

क க [ka]	ख க$_2$ [kka]	ग க$_3$ [ga]	घ க$_4$ [gha]	ङ ங
च ச [ca]	छ ச$_2$ [cha]	ज ஜ [ja]	झ ஜ [jha]	ञ ஞ
ट ட [ta]	ठ ட$_2$ [tta]	ड ட$_3$ [da]	ढ ட$_4$ [dda]	ण ண
त த [tha]	थ த$_2$ [thha]	द த$_3$ [dha]	ध த$_4$ [dhha]	न ந,ன
प ப [pa]	फ ப$_2$ [pha]	ब ப$_3$ [ba]	भ ப$_4$ [bha]	म ம
य ய	र ர	ल ல	व வ	

स ஸ [sa]	ष ஷ [sha]	क्ष க்ஷ [ksha]	ह ஹ [ha]
श ஶ [śā]	ज्ञ ஜ்ஞ [gna]	ऋ ரு [ri]	

'श' என்ற எழுத்து **'ஶ'** என்று எழுத்துப்பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த **'ஶ'** என்னும் எழுத்து **'பிசகு'**, **'கசடு'** என்னும் சொற்களில் வரும் **'ச'**வைப் போன்று ஒலிக்கும்.

சம்ஸ்கிருத–தமிழ் எழுத்துப்பெயர்ப்பில் **(Transliteration)** கொடுத்துள்ள எழுத்துக்கள் எழுத்துப்பெயர்ப்பில் மட்டும்

பயன்படுத்தப்பட்டுள்ளன. மொழிபெயர்ப்பில், வழக்கத்தில் உள்ள தமிழ் எழுத்துக்களே பயன்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக **'सुखं'** என்ற சொல் எழுத்துப்பெயர்ப்பில் **'ஸுக$_2$ம்'** என்றும், மொழிபெயர்ப்பில் **'சுகம்'** என்றும் எழுதப்பட்டுள்ளது.

சம்ஸ்கிருதத்தில் உள்ள உயிரெழுத்தான **'ऋ'** என்பது உயிரெழுத்தாக வரும்பொழுது **'ரி'** என்றும், உயிர்மெய்யெழுத்தாக வரும்பொழுது **'ரு'** என்றும் உச்சரிக்கப்படுகிறது. (உ–ம்.:– **ऋषि – ரிஷி, कृत्वा – க்ருத்வா)** இந்த **'ரு'** என்னும் எழுத்து **'எருது'**, **'விருது'** என்னும் சொற்களில் வரும் **'ரு'**வைப் போன்று ஒலிக்கும்.

'ञ' என்ற எழுத்து **'ஞ'** என்றும், **'ज्ञ'** என்ற கூட்டெழுத்து **'க்ஞ'** என்றும் எழுத்துப்பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன. **'ञ'** என்ற எழுத்தில் துவங்கும் சொற்களில்லை.

ஒரு சொல்லிற்கு மேல் இருக்கின்ற புள்ளியானது **'ம்'** என்னும் எழுத்தைக் குறிக்கிறது. (உ–ம்.:– **सुखं** – **ஸுகம்**)

ஒரு சொல்லின் இறுதியில் மேலும் கீழும் வருகின்ற இரு புள்ளிகள் (:) **'விஸர்கம்'** என்று அழைக்கப்படுகிறது. இதன் உச்சரிப்பு, இதற்கு முன் வரும் எழுத்தைப் பொறுத்து அமையும். **உதாரணம் பின்வருமாறு :–**

भवन्तः	–	ப$_4$வந்த:	–	ப$_4$வந்த**ஹ**
स्थितिः	–	ஸ்தி$_2$தி:	–	ஸ்தி$_2$தி**ஹி**
प्रभुः	–	ப்ரபு$_4$:	–	ப்ரபு$_4$**ஹு**
गुणैः	–	கு$_3$ணை:	–	கு$_3$ணை**ஹி**
भ्रुवोः	–	ப்$_4$ருவோ:	–	ப்$_4$ருவோ**ஹோ**

சம்ஸ்கிருதச் சுலோகங்களில் சில இடங்களில் **'ऽ'** அல்லது **'ऽऽ'** என்னும் குறியீடுகளைக் காணலாம். இதற்கு **'அவக்$_3$ரஹம்'** என்று பெயர். இந்த இடங்களில் முறையே **'அ'**, **'ஆ'** என்னும் எழுத்துக்கள் தொக்கி நிற்கின்றன என்று பொருள் கொள்க.

|| ஓம் ஸ்ரீபரமாத்மநே நம: ||

சரணாகதி

தியானம்

ந வித்$_3$யா யேஷாம் ஸ்ரீர்ந ஶரணமபீஷ்ந்ந ச கு$_3$ணா:
பரித்யக்தா லோகைரபி வ்ருஜிநயுக்தா: ஶ்ருதிஜட$_3$ா: ।
ஶரண்யம் யம் தேऽபி ப்ரஸ்ருதகு$_3$ணமாஶ்ரித்ய ஸுஜநா
விமுக்தாஸ்தம் வந்தே$_3$ யது$_3$பதிமஹம் க்ருஷ்ணமமலம் ||

"கல்வியோ, செல்வமோ, வேறு உறுதுணையோ, நற்குணங்களோ, மறைநூல்களின் அறிவோ இன்றி, உலகினாலும் 'அற்பன்' என்று அறவே ஒதுக்கப்பட்ட நிலையில் உள்ள ஒருவன், அடைக்கலம் புகுந்தவர்களைக் கைவிடாத தன்மையரான, எந்த பகவானைச் சரண்புகுந்ததால் மட்டும் மெய்யடியவனாகி முக்தி நிலையை அடைகிறானோ, அந்த உலகம் புகழும் குணக்கடலான, யாதவர்க்கு இறைவனான அமலனாதிபிரானை, கண்ணனை வந்தனம் செய்கிறேன்."

கீதையின் ஸாரமான சுலோகம்

ஸர்வத$_4$ர்மாந்பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ ।
அஹம் த்வா ஸர்வபாபேப்$_4$யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச: ||

(ஸ்ரீமத் பகவத்கீதை 18/66)

தர்மங்கள் அனைத்தையும் அதாவது செய்ய வேண்டிய கடமைகள் அனைத்தையும் என்னிடம் அர்ப்பணம் செய்துவிட்டு, சர்வ வல்லமை பொருந்திய, எல்லாவற்றிற்கும் ஆதாரமான, பரமேசுவரனான என் ஒருவனையே சரணடைவாயாக! நான் உன்னைப் பாவங்கள் அனைத்திலிருந்தும் விடுவிப்பேன், வருந்தாதே!

விரிவுரை

'ஸர்வத$_4$ர்மாந்பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ' – 'தர்மங்களையே முழுவதும் சார்ந்து நிற்றல், தர்மங்கள் எவை

என்று முடிவு கட்டுவதில் ஆராய்ச்சி – இவற்றை விட்டுவிட்டு, அதாவது எதைச் செய்வது, எதை விலக்குவது என்ற ஆராய்ச்சியை ஒழித்து, என்னையே அடைக்கலமாகப் பற்றுக!' என்று கண்ணபிரான் கூறுகிறார். 'தானே இறைவனிடம் அடைக்கலம் புகுவது' – இது எல்லா ஸாதனங்களுக்குள்ளும் (நெறிகளுக்குள்ளும்) ஸாரமானது. இம்முறையில் அடைக்கலம் புகுந்த அடியவன், தனக்கென்று ஒன்றைச் செய்து கொள்வான் என்ற பேச்சுக்கே இடமில்லை. ஒரு கற்புடைய பெண், தனக்கென்று எதையும் செய்வதில்லை. மேலும் அவள், தன் உடலைப் பேணுவதும் பதியின் உகப்புக்காகவே. வீடு, குடும்பம், குழந்தைகள், தன்னுடையது என்ற உடல் அனைத்தையும் கணவனுடையவையே என்றே கருதுகிறாள். ஒரு பத்தினி, மணம் புரிந்து கொண்ட கணவனிடத்திலுள்ள ஈடுபட்டால், தன் கோத்திரத்தையும் மாற்றிக் கொண்டு அவன் வீட்டிலேயே வாழ முற்படுகிறாள். அதுபோல அடைக்கலம் புகுந்த அடியவன் உடலை ஒட்டிய கோத்திரம், ஜாதி, பெயர் முதலிய அனைத்தையும் எம்பெருமான் திருவடிகளில் அர்ப்பணம் செய்துவிட்டுக் கவலையின்றி, அச்சமின்றி, துன்பமின்றி, ஐயமின்றி வாழ்கிறான்.

கீதையின்படி இங்கு *'தர்மம்'* என்ற சொல் கடமையாற்றல் என்றே பொருள்படும். காரணம், பதினெட்டாவது அத்தியாயத்தின் 41வது சுலோகத்திலிருந்து 44வது சுலோகம் வரை *'ஸ்வப$_4$ாவஜம் கர்ம'* என்ற சொல் வருகிறது. பிறகு, 47வது சுலோகத்தின் முதல் பகுதியில் *'ஸ்வதர்மம்'* என்ற சொல் வருகிறது. 47வது சுலோகத்தின் அடுத்த பகுதியிலும், 48வது சுலோகத்திலும் (இந்தச் சந்தர்ப்பத்தின் நிறைவுப் பகுதி) *'கர்ம'* என்ற பதம் காணப்படுகிறது. முதலிலும் முடிவிலும் *'கர்ம'* என்ற பதம் வருகிறது. இடையில் *'ஸ்வதர்மம்'* என்ற சொல் வருகிறது. இதனால் *'தர்மம்'* என்ற சொல்லுக்கு, *'கடமையாற்றல்'*† என்றே பொருள் கொள்ள வேண்டும் என்பது புலனாகிறது.

† *கடமையாற்றல்:–* அவரவர் வர்ணாசிரம நெறிகளைப் பின்பற்றி ஒழுகுதல்.

வினா:– *'ஸர்வத$_4$ர்மாந்பரித்யஜ்ய'* என்ற தொடருக்குக் கடமையாற்றுவதையே முழுக்க விட்டுவிட வேண்டும் என்பது பொருளா?

விடை:– கடமையை விடுதல் என்பது கீதைக்கு முரணானது. இங்கு எடுத்துக் கொண்ட விஷயத்திற்கும் மிகவும் முரண்படுகிறது. ஏனெனில், எம்பெருமானின் இவ்வுபதேசத்தைச் செவியுற்ற அர்ஜுனன் 'போர்புரிதல்' என்ற தமது கடமையைத் துறந்து விடவில்லை. மாறாக, *'கரிஷ்யே வசநம் தவ' (கீதை 18/73)* (உன் சொற்படியே செய்கிறேன்) என்றுரைத்து, இறைவனின் கட்டளைக்கிணங்கக் கடமையை மேற்கொள்கிறார்; அறநெறிப்படி போர் புரிகிறார். அதனால் 'தர்மம் அல்லது கடமையாற்றுதல் என்பதைத் துறந்துவிட வேண்டும்' என்று பொருள் இல்லை. பகவானும் 'கடமையைத் துற' என்று எப்படி ஆணையிட முடியும்? இதே அத்தியாயத்தின் 6வது சுலோகத்தில் வேள்வி, கொடை, தவம், அவரவருடைய வர்ணாசிரம தர்ம நியமங்கள் – இவற்றை விடுவது கூடாது; கட்டாயமாகச் செய்தே ஆகவேண்டும் என்று அவரே வலியுறுத்தி இருக்கவில்லையா? †

---

† பகவான் கீதையில் மூன்றாவது அத்தியாயத்தில், துறக்காது கடமையாற்றுவதை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வலியுறுத்தி உள்ளார். கடமையைத் துறப்பதால் செயலற்றிருக்கும் நிலையோ (நிஷ்கர்மதா), ஸித்தியோ ஏற்பட்டுவிடாது (சுலோ. 4). எந்த ஒரு மனிதனும், எந்த நிலையிலும் கணப்பொழுதுகூடச் செயலைத் துறந்து இருக்க முடியாது (சுலோ. 5). வெளிப்பார்வைக்குச் செயலைத் துறந்ததுபோல் தோற்றமளித்து கொண்டு, மனத்திற்குள் புலன் நுகர்ச்சி பற்றிய எண்ணம் கொள்பவன் களவொழுக்கம் (மித்யாசாரம்) உள்ளவன் (சுலோ. 6). மனத்தையும் புலன்களையும் அடக்கிக் கடமையாற்றுபவனே சிறந்தவன் (சுலோ. 7). செயலின்றி உடல் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது. ஆகவே, கடமையாற்றல் வேண்டும் (சுலோ. 8).

'கர்மணா ப$_3$த்$_4$யதே ஜந்து:' (செயலால் கட்டுப்படுகிறான்) என்ற வசனப்படி, உலகியலில் கட்டுப்பட்டு விடுவோம் என்ற பயத்தினால், ஒருவன் செயல்படுதலிலிருந்து தப்பிக்க எண்ணக்

'மனிதன் எந்த நிலையிலும் செய்யவேண்டிய கடமையினின்றும் பிறழக் கூடாது' என்று கீதை முழுவதும் வலியுறுத்தப்படுகிறது. முதலில் அர்ஜுனன், 'போர் எனும் கடமையையொழித்துப் பிச்சையெடுத்து வாழ்வதே மேல்' என்ற கருத்தை வெளியிடுகிறார் (2/5). ஆனால், பரமன் அதைத் தடுத்துரைக்கிறார் (2/31–38). கர்மாவைச் செய்யாமல் தியாகம் செய்வது (ஸ்வரூப தியாகம் செய்தல்) கீதையில் இல்லை.

'கடமை துறத்தல்' என்றால் வேறு என்னதான் அர்த்தம்? 'அறம்' என்று எதைத்தான் கூறுவது?

கடமைகள் அனைத்தையும் செய்து முடித்து, பகவானிடம் அர்ப்பணிப்பதையே மேலான அறம் என்று கீதை பகர்கிறது. இதில் கடமை என்ற அறத்தைச் சாராதிருத்தல், முழுக்க இறைவனையே சார்ந்திருத்தல் என்ற இரண்டும் முடிவாகி விடுகிறது. கடமை என்னும் அறத்தைச் சார்ந்திருந்தால், மேலும் மேலும் பிறப்பிறப்புக்கள் தொடரும். ***'ஏவம் த்ரயீத$_4$ர்மமநுப்ரபந்நா க$_3$தாக$_3$தம் காமகாமா லப$_4$ந்தே ॥' (கீதை 9/21).***

கூடாது. 'கடமை காத்தல்' என்ற ஒரே காரணத்திற்காகச் செயல்பட்டால், அது பந்தத்திற்குக் காரணமாகாது. செய்ய வேண்டிய கடமையின் வழிமுறையை ஏற்றுச் செய்வதை விடுத்துத் தனக்கென்று செயல்படுவதே பந்தப்படுத்தும் (சுலோ. 9). பிரும்மதேவன் கடமையுடன் சேர்த்து ஜீவகோடிகளைப் படைத்து, 'செய்யவேண்டிய கர்மங்களைச் செய்தாலே உங்களுக்கு அபிவிருத்தி ஏற்படும்; செய்வதற்கான ஸாதனங்களையும் தருவதாய் அமையும்' (சுலோ. 10) என்றன்றோ கூறியுள்ளார். இவ்வாறு ஜீவகோடிகளின் முக்கியப் பிரிவினரான மனிதர்களும் அமரர்களும் தத்தம் கடமைகளைச் செய்வதன் மூலம் பரஸ்பரம் மதிப்பளித்துக் கொண்டு நலமடைவர் (சுலோ. 11). கடமையாற்றாமல் பலனை மட்டுமே கவர்ந்து அனுபவிப்பவன் திருடன் (சுலோ. 12). கடமைக்காகவே கடமையாற்றுபவன் பாவங்கள் அனைத்திலிருந்தும் விடுதலை பெறுகிறான். தன்னலத்துடன் கடமையாற்றுபவன் பாவங்களையே உண்பவனாக ஆகிறான் (சுலோ. 13). கடமை காப்பதனாலேயே படைப்பின் சக்கரம் சுழல்கிறது. ஆனால், யார் (படைப்பின் நோக்கம்

இம்முறையில், அறம் சார்ந்து நிற்பதைத் தவிர்த்து இறைசார்ந்து நின்றால், அறம் எது? என்று தீர்மானிக்கும் தொல்லையில் இருந்தும் மனிதன் விடுபடுகிறான். அர்ஜுனனின் விஷயத்திலும் இவ்வாறு நிகழ்ந்துள்ளது.

பாரதப்போரின் போக்கில் நடைபெறும் ஒரு நிகழ்ச்சி:-

அர்ஜுனனுக்கும் கர்ணனுக்கும் போர் நடந்து கொண்டிருந்தது. கர்ணனின் தேர்ச்சக்கரம் பூமியில் புதையுண்டு போகிறது. கர்ணன் கீழிறங்கித் தேரை நிமிர்த்த முயல்கிறான். "நான், சக்கரத்தைத் தூக்கி நிறுத்தும் வரை நீ சற்றுப் பொறு. ஏனெனில், நீ தேரின் மேலே இருக்கிறாய். நானோ தேர் இல்லாது நிற்கிறேன். அதாவது வேறு வேலையில் ஆழ்ந்துள்ளேன். நீ, கார்த்தவீர்யன் அளவு சஸ்திரங்களும் சாஸ்திரங்களும் அறிந்தவன். தர்மம் அறிந்த நீ, என்னைத் தாக்குவது உகந்ததன்று" என்று இவ்வாறு அறத்தைக் காரணங்கூறி, அர்ஜுனனை அம்பெய்யாதிருக்கக் கூறுகிறான், கர்ணன். அறம் என்ற சொல் அர்ஜுனனைக் கட்டுப்படுத்துகிறது. ஆனால் கண்ணன், கர்ணனை நோக்கி, "உன்னைப் போன்ற

புரியாததனால்) கடமை காக்கத் தவறுகிறாரோ, அவரது வாழ்நாள் வீணானதாகும் (சுலோ. 16). பலனில் பற்றின்றி வினைபுரிபவன் பரம்பொருளை அடைகிறான் (சுலோ. 19). மேலும், மகாஞானியான ஜனகர் முதலானோர் கர்மம் செய்தே ஸித்தி பெற்றனர். உலகம் சீராக நடைபெறவும் கர்மம் புரிய வேண்டும் (சுலோ. 20). பகவான் தம்மையே முன்மாதிரியாகக் காட்டிக் கூறுகிறார்— 'நான் கவனமாக என் கடமையை ஆற்றாமல் இருந்தால், வர்ணங்களின் கலப்பு ஏற்படும். உலகிற்கு அழிவு ஏற்பட்டுவிடும்' (சுலோ. 23,24). ஞானிகள் கூட அஞ்ஞானிகளான சாதாரண ஆஸ்திகர்கள் போலக் கடமைகளை ஆற்ற வேண்டும் (சுலோ. 25). சாதாரண மனிதர்கள் கடமையாற்றுவதில் மாற்று எண்ணம் கொள்ளாதவாறு, ஞானிகள் தம் கடமைகளைச் சிரத்தையாக ஆற்றவேண்டும். மற்றவர்களையும் ஆற்றச் செய்யவேண்டும் (சுலோ. 26). இப்படி மூன்றாம் அத்தியாயத்தில், பகவான் 'கடமைகளை ஆற்ற வேண்டும்' என்று வற்புறுத்தி இருக்கிறார்.

† படுபாதகனை (ஆததாயி) எம்முறையில் கொன்றாலும் பாவம் இல்லை; நன்மைதான். ‡ படுபாவியின் ஆறு அடையாளங்களும் உன்னிடம் உள்ளன. நீங்கள் ஆறு மகாரதர்கள் சூழ்ந்து கொண்டு அபிமன்யுவைக் கொன்றதை, இத்தனை விரைவாக மறந்து விட்டாயோ! அறத்தின் பெயரில் ஒளிந்து கொள்வதில் பயனில்லை. அறம் இப்பொழுதாவது உன் நினைவில் வருகிறதே! அந்தமட்டில் நல்லதுதான். ஆனால், அறத்தைக் கடைப்பிடிக்காதவனுக்கு அறத்தின் பெயரில் தப்புவதற்கு உரிமை கிடையாது'' என்று கூறி, அர்ஜுனனை அம்பு தொடுக்கக் கட்டளையிடுகிறார். அர்ஜுனன் பாணமழை பொழிய ஆரம்பிக்கிறார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அறத்தை முடிவு செய்தது அச்சுதனேயன்றோ! அண்ணல் முடிவு செய்ததை, அர்ஜுனன் நிறைவேற்றுகிறார். தமது புத்தியினால் 'அறம் எது?' என்று தீர்மானித்து, கர்ணன் கேட்டுக் கொண்டபடி போர் புரியாது இருந்தால், அர்ஜுனன் தவறு செய்தவராவார்.

முதலில் அர்ஜுனனின் மனத்தில் போர்புரிவது சிறந்ததா, போரைத் தவிர்ப்பது சிறந்ததா? என்ற ஐயப்பாடு இருந்தது (கீதை 2/6). போர் புரிந்தால் குலத்திற்கு அழிவு நேரிடும்.

---

† *ஆததாயிநமாயாந்தம் ஹந்யாதே₃வாவிசாரயந் ॥*
நாததாயிவதே₄ தே₃ாஷோ ஹந்துர்ப₄வதி கஶ்சந ।
(மநுஸ்ம்ருதி 8/350,351)

பாதகர்களை யோசிக்காமல் கொல்ல வேண்டும். அவ்வாறு கொல்பவர்களுக்குப் பாவம் ஏற்படாது.

‡ *அக்₃நிதே₃ா க₃ரத₃ஶ்சைவ ஶஸ்த்ரபாணிர்த₄நாபஹ: ।*
க்ஷேத்ரதா₃ராபஹர்தா ச ஷடே₃தே ஹ்யாததாயிந: ॥
(வஸிஷ்ட₃ஸ்ம்ருதி 3/19)

தீ வைப்பவன், விஷம் கொடுத்துக் கொல்பவன், ஆயுதம் எடுத்துக் கொலைபுரிபவன், பணம் திருடுபவன், பிறர் நிலத்தை அபகரிப்பவன், பிறன் மனைவியைக் கவர்பவன் – இந்த அறுவரும் மகாபாதகம் செய்பவர்களாவர்.

குலத்தை அழிப்பதோ பெரும்பாவமாகச் சொல்லப்படுகிறது. *‘ஸ ஏவ பாபிஷ்ட₂தமோ ய: குர்யாத் குலநாஶநம்’* (குலநாசத்திற்குக் காரணமானவன், பாவிகளில் மிகக் கொடியவன்). இதனால் விபரீத விளைவுகள் தொடரும் (கீதை 1/40–44). அதே அறநூல்கள், க்ஷத்திரியர்களுக்குப் போர் புரிவதே மேன்மை அடைவதற்கு மேலான ஸாதனம் என்றும் வலியுறுத்துகின்றனவே? எனவே, மேலான அறம் எது? என்பதை முடிவு கட்டுவதில் சிக்கல் ஏற்பட்டுவிடுகிறது. பகவான் சொல்கிறார்— †‘தர்மத்தை நிர்ணயம் செய்யும் பொறுப்பை என்னிடம் விட்டுவிடு’ என்று. அதுதான் *‘ஸர்வத₄ர்மாந்–பரித்யஜ்ய’* என்பதன் முழுப்பொருள்.

‘மாமேகம் ஶரணம் வ்ரஜ’ – இச்சொற்றொடரில் *‘ஏகம்’* என்ற சொல் *‘மாம்’* என்ற பதத்தின் பெயருரிச்சொல்லாக (Adjective) இருக்க முடியாது. ஏனெனில், *‘மாம்’* (என்னை) என்று கூறும் பகவான், ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஒரே பரதத்துவம் அன்றோ! இருமையோ, பன்மையோ தள்ளப்படுகிறது. இறைவனைத் தவிர்த்து மற்றைய சாதனங்களைத் தள்ளுவதே *‘ஏகம்’* என்ற பதத்தின் உட்கருத்து. *‘அநந்ய’* (வேறு அற்ற) என்பதைக் குறிப்பது இச்சொல். மேலும் அர்ஜுனன், ***‘ததே₃கம் வத₃ நிஶ்சித்ய’ (கீதை 3/2)*** (ஒன்றைத் தீர்மானித்து உரைப்பாய்), *‘யச்ச்₂ரேய ஏகயோரேகம்’* ***(கீதை 5/1)*** (இரண்டில் எது ஒன்று சிறந்ததோ) என்ற கேள்விகள் தொடுத்திருக்கிறார். ஸாங்க்யயோகம், கர்மயோகம் – இவற்றை பகவான் விவரிக்குங்கால், *‘ஏகம்’* எனும் பதத்தால், ‘‘இரண்டு யோகங்களிலும் மேலான ‘ஒன்றை’ நிச்சயித்துரைப்பாய்’’ என்று அர்ஜுனன் கேட்டது இங்கு நினைவுறுத்தப்படுகிறது.

---

† தர்மம் என்றால் தன்மை, ஸ்வபாவம், இயற்கை என்ற பொருளும் உண்டு. நீருக்குக் குளுமை தர்மம். நெருப்புக்குச் சுடுவது தர்மம் (தன்மை). அதுபோல மனிதனுக்கு ‘தான் செய்கிறேன்’ என்ற அகங்காரம் தர்மம் (தன்மை). ‘இந்தச் செயலின் பயன் எனக்கு’ என்ற மமகாரமும் தர்மம் (தன்மை). இந்த அகங்கார–மமகாரங்கள் என்ற தர்மங்களை (தன்மைகளை) விட்டு ***(பரித்யஜ்ய)***.

அந்த 'ஒன்றை' நினைவில் கொண்டு, ஸாங்க்யயோகம், பக்தியோகம் முதலான பகவத் பிராப்தியை அடைவதற்கான மேலான உபாயங்களுள் முழுமையானதும் முக்கியமானதுமான 'அநன்ய சரணாகதி' என்ற உபாயத்தை பகவான் பகரலுற்றார்.

கீதையில் அர்ஜுனன், தமது ஆன்மிக மேன்மைக்கான வழிகளைப் பற்றி நிறையக் கேள்விகளைக் கேட்கிறார். கண்ணபிரான் அவற்றுக்கு விடையும் கொடுத்திருக்கிறார். கீதையில் முன்னும் பின்னுமாய்ப் பார்த்தால், இறையுணர்விற்கான பல சாதனங்கள் கூறப்பட்டிருப்பதை உணரலாம். ஆனால், அம்முழுமை பெற்ற உபாயங்களுக்கெல்லாம் சாரமாகவும் தலையாயதாயும் விளங்குவது 'அநன்ய சரணாகதி' ஒன்றுதான் என்பது தெற்றென விளங்கும்.

கண்ணபிரான், 'அநன்ய பக்தி'யின் மகிமை பற்றிப் பல இடங்களில் சொல்கிறார்— 'கடத்தற்கரிய மாயையைத் தாண்டும் உபாயம், என்னையே சரணடைவதுதான்' (7/14); 'என்னைத் தவிர வேறு சிந்தனையற்றவர்களுக்கு, நான் எளிதில் கிடைப்பேன்' (8/14); 'பரமபுருஷனை அடைவது என்பது, அநன்ய பக்தியாலேயே கிடைக்கும்' (8/22); 'வேறொன்றிலும் இன்றி என்னிடம் அன்பு செய்வோரின் இம்மை–மறுமைக்கான பொறுப்பை, நான் ஏற்றுக் கொள்கிறேன்' (9/22); 'அநன்ய பக்தியினால் இறைவனை அறியவும், பார்க்கவும், எளிதில் அடையவும் முடியும்' (11/54); 'அநன்ய பக்தியோகத்தால் என்னிடம் அன்பு செலுத்துவோரை விரைவில் பிறவிப் பெருங்கடலினின்றும் மீட்பேன்' (12/6,7); 'அநன்ய பக்திதான், முக்குண வடிவான தளை நீங்குவதற்கு உபாயம்' (14/26). அநன்ய பக்தியின் பெருமையைப் பல இடங்களிலும் இவ்வாறு உரைத்த இறைவன், இங்கு *'மாமேகம் ஶரணம் வ்ரஜ'* என்று கீதாசாரத்தைப் பகர்கின்றார். அடைவதற்கான வழியும், அடையப் பெறும் பொருளும் (சாதனமும் ஸாத்யமும்) கண்ணனே என்பது இதன் திரண்ட பொருள்!

'மாமேகம் ஶரணம் வ்ரஜ' என்றால் மனத்தாலும் அறிவாலும் சரணாகதியைச் சாதனமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது

பொருள் அன்று. தன்னையே சரண்யனிடம் ஒப்படைத்தல் என்பதே பொருள். தன்னையே ஒப்படைத்தபின் மனம், அறிவு, ஆற்றல், புலன்கள், உடல் – இவையனைத்தும் அவனிடத்தில் சமர்ப்பணமாகி விடுகிறது. இவற்றில் யாதொன்றும் தனித்து நின்று விடுவதில்லை.

'அஹம் த்வா ஸர்வபாபேப்$_4$யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச: ॥' (கீதை 18/66). (நான், உன்னை அனைத்துப் பாவங்களிலிருந்தும் விடுவிக்கிறேன், வருந்தாதே!) அர்ஜுனன் முதல் அத்தியாயத்தில் கூறியபடி போர்புரிவதாலும் குலநாசத்தாலும் ஏற்படும் பாவங்களை நீக்குவதற்கு, கண்ணன் இவ்வாறு அவருக்கு ஆசை காட்டுகிறாரோ? என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால், பகவானின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, அவரிடம் முற்றிலுமாகச் சரணடைந்துவிட்ட நிலையில் செயல்படும் அர்ஜுனனுக்குப் பாவமேற்பட வாய்ப்பு உண்டா? என்று அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். †அவரிடம் அடைக்கலம் புகுந்து, பொறுப்பை ஒப்படைத்த ஒருவனுக்கு இத்தகைய ஆசை காட்டுவதற்கான வாய்ப்போ, தேவையோ இல்லை. பகவானைச் சரணாகதனாகாத ஒருவனுக்குத் தேவையாகலாம்.

'நான், உன்னைப் பாவங்கள் அனைத்திலிருந்தும் முற்றிலுமாக விடுவிக்கிறேன்.' இதன் பொருள்:– நீ அறம் சார்ந்து நிற்பதைத் துறந்து, எனது அடைக்கலப் பொருளான பின், உன் எண்ணங்கள், செயல் முனைப்புகள், செயல்பாடுகள் – இவற்றில் சீரிய மாற்றங்கள் ஏற்படாதிருப்பினும், பகவத் பக்தி முதிராவிட்டாலும், உனது தகுதியின்மையும் வலிமைக்குறைவும்

---

† ***ஸந்முக$_2$ ஹோஇ ஜீவ மோஹி ஜப$_3$ஹீ(ம்) ।***
ஜந்ம கோடி அக$_4$ நாஸஹி(ம்) தப$_3$ஹீ(ம்) ॥
(ஸ்ரீராமசரிதமாநஸம் 5/44/1)

எப்பொழுது ஜீவன் என்னை நோக்கி வந்துவிட்டானோ, அப்பொழுது அவன் பல கோடி பிறவிகளில் செய்த பாவங்கள் அனைத்தும் அழியும்.

வெளிப்பட்டாலும், அவற்றினால் அச்சமோ, கவலையோ கொள்ளாதே. 'சரணாகதன்' என்ற தகுதி, மற்றக் குறைகளை மறைத்து விடுகிறது. முழுமையாக 'அநன்ய சரணாகதி' செய்தபின், உன்னில் எவ்விதம் குறைபாடுகள் தோன்ற முடியும்? உனது தகுதியின்மை முதலிய குறைகள், என்னுடைய குறைகளாகி விடுகின்றன. அவற்றை நீக்குவது எனது பொறுப்பாகிவிடுகிறது. சிந்தையும் சோகமும் அச்சமும் ஐயமும் தவிர்த்து, சரணாகதியில் நிலைபெற்று நிற்பதே உனது ஒரே பொறுப்பும் வேலையும் ஆகும். அச்சம், கவலை, ஐயம் ஆகிய குறைபாடுகள் தலையெடுத்தால், என்னிடம் புகலடைவதற்குத் தடங்கல் ஏற்பட்டு, பாரம் உனதாகிவிடுகிறது. புகலடைந்தபின், ஜீவன் சுமையை ஏறிட்டுக் கொள்வது சரணாகதி செய்ததற்கு ஓர் இழுக்காகும் என்கிறார், பகவான்.

தன்னைச் சரணடைந்த விபீஷணருக்கு ஏற்பட்ட ஒரு பழியை, இராமபிரான் தமது குற்றமாகக் கொள்வதை, இங்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

ஒருமுறை விபீஷணர், இலங்கையை விட்டுக் கடலின் இக்கரைக்கு வந்தபோது, விப்ரகோஷம் என்ற சிற்றூரில் அறியாமல் அவருக்கு 'பிரம்மஹத்தி' என்ற அபராதம் ஏற்பட்டு விட்டது. அந்தணர்கள் ஒன்றுகூடி, அவரை அடித்துக் கொல்ல முயன்றனர். அவர் இறக்கவில்லை. அவரைச் சங்கிலியால் பிணைத்து, பூமிக்கடியில் ஒரு குகையில் அடைத்து விட்டார்கள். விபரமறிந்த இராமபிரான் உடனே புஷ்பக விமானத்தில் அவ்விடம் வந்து சேர்ந்தார். அந்தணர்கள் அவரைப் பூஜித்து நடந்த நிகழ்ச்சியைத் தெரிவித்தனர். தாங்கள் அளித்த தண்டனையைப் பற்றியும் தெரிவித்தனர். ''பேரரசே! இவர் பிரம்மஹத்தி செய்துவிட்டார். எனவே, இவரை நன்கு அடித்தோம். ஆனால், ஆள் இறக்கக் காணோம்?'' என்றனர். அதற்கு இராமபிரான், ''அந்தணர்களே! விபீஷணருக்கு நான் கல்பம் முடியும் வரைக்கும் ஆயுளும் அரசும் அளித்துள்ளேன். அவரைக் கொல்ல முடியாது. என் பக்தரான அவரைக் கொல்லத் தேவையும் இல்லை.

வேலையாளின் தவற்றுக்குப் பொறுப்பு, யஜமானனே ஆவான். என் அடியவனுக்காக நான் இறக்கவும் தயார். ஆகவே, தண்டனை அளிப்பதானால் எனக்குக் கொடுங்கள். நான் ஏற்கிறேன்''† என்று கூறினார். சரணாகத வத்ஸலனான பகவானின் தன்மையைக் கண்டு வியந்த அவ்வந்தணர்கள், இராமபிரானைச் சரணடைந்து, விபீஷணரை விடுவித்தனர்.

''நான் பகவானைச் சார்ந்தவன், பகவான் என்னைச் சார்ந்தவர்'' என்ற உணர்வொன்றிய நிலைக்குச் சமமாக வேறு எந்தத் தகுதியையும் சொல்ல முடியாது. இதுவே (உணர்வொன்றிய நிலையே) சாதனங்களின் சாரமாகும்.

சிறு குழந்தை இந்த உரிமையின் காரணமாகவே நடுநிசியில் உரக்க அழுது வீட்டையே கலக்குகிறது. வீட்டார் அனைவரும் பயந்து, அக்குழந்தையைச் சமாதானம் செய்கிறார்கள்.

இதுபோன்று சரணாகதனான பக்தன், தன் நிறைகுறைகளை நினையாமல், பகவானுடன் உணர்வொன்றிய நிலை பற்றியே கருத்துச் செலுத்த வேண்டும்.

மா ஶுச: (வருந்தாதே)

1. என்னைச் சரண்புகுந்த பின்னும் கவலை கொண்டால், அது எனக்கு இழைக்கும் குற்றமாகும். அது உனது அகந்தையைக் குறிக்கும். சரணாகதிக்கொரு களங்கத்தை ஏற்படுத்தும்.

மகாவிசுவாசம் (பூரண நம்பிக்கை) இல்லாத சரணாகதி, எனக்குச் செய்யும் குற்றம். தன் குறைகளை நினைத்துக் கவலை கொள்வது, தனது பலத்திலுள்ள அகந்தையாகவே கொள்ளத்தக்கது. குறைகளைக் களையும் விஷயத்தில் தனது

---

† *வரம் மமைவ மரணம் மத்$_3$ப$_4$க்தோ ஹந்யதே கத$_2$ம் ।
ராஜ்யமாயுர்மயா த$_3$த்தம் ததை$_2$வ ஸ ப$_4$விஷ்யதி ॥
ப்$_4$ருத்யாபராதே$_4$ ஸர்வத்ர ஸ்வாமிநோ த$_3$ண்ட$_3$ இஷ்யதே ।
ராமவாக்யம் த்$_3$விஜா: ஶ்ருத்வா விஸ்மயாதி$_3$த$_3$மப்$_3$ருவந் ॥*
(பத்$_3$மபுராணம், பாதாளகண்டம். 104/150,151)

திறமை தலையெடுத்தால், குறைகளைக் களையும் எண்ணம் தலையெடுக்கிறது. ஆம், குறைகளைக் களையும் எண்ணமின்றி வருத்தம் மட்டும் ஏற்பட்டால், அது அவ்வளவு பெரிய தவறு அன்று.

ஒரு குழந்தை, நாயொன்று தன் அருகில் வருவதைப் பார்த்து அழலாம். அது பயத்தால் அழுகிறதே தவிர, (தற்காப்புக்கான) கவலை கொள்வதில்லை. அதுபோல, தன்னிடமுள்ள குற்றங்களைத் தெரிந்து கொள்வதாலோ, கழிவிரக்கம் கொள்வதாலோ, சரணாகதனுக்கு மாசு ஏற்படுவதில்லை என்றாகிறது. அது, ஆன்மிக முன்னேற்றத்திற்குத் தடையாகிவிடுமோ என்ற அச்சம், பூரணவிசுவாசத்தில் களங்கம் ஏற்படுத்தி, சரணாகதிக்குக் குறையேற்படுத்துகிறது. "இக்கவலையினால் தன்னுள் ஒளிந்திருக்கும் † வலிமையின் துணையால் அக்குறைகளைக் களைய முற்படுவாய். பின் எனது தேவை என்ன?" என்ற கேள்விக் கணையைத் தொடுக்கிறார், கண்ணபிரான். எனக்கு அடியவன் என்று ஆனபின்பும் கவலைகள் ஏற்பட்டால், அவற்றை யார்தான் களைவர்? இதைப் பார்க்கும் மக்கள், இறையடியவனாய் இருந்தும் கவலைப்படுகிறானே? இறைவன் இவனது துன்பத்தை நீக்குவதில்லையா? என்றும் குறை கூறுவர்! என்னை நம்பாமல் குறைகளை நினைத்துக் கவலை கொண்டால், பூரணவிசுவாசம் குறைகிறது. (இதன்மூலம்)

---

† கௌரவர்களின் சபையில், கொடிய துச்சாதனனால் திரௌபதி கூந்தலைப் பற்றியிழுத்து வரப்படுகிறாள். மேலும் அவன் அவளது ஆடையைப் பற்றியிழுக்கும்பொழுது, திரௌபதி ஆடையைக் கைகளாலும் பற்களாலும் பற்றியிழுத்துக் கொள்கிறாள். தன் வலிமையைத் துணைகொண்டு கண்ணனை அழைத்ததால், அவரது அருள்பெற தாமதம் ஏற்பட்டது. பாஞ்சாலி தன் முயற்சியை முழுவதும் கைவிட்டு, கண்ணனிடம் முழுமையாக அடைக்கலம் புகுந்தபின், ஆடைகளைக் களைய முற்பட்ட துச்சாதனன் களைத்து விழுகிறான். துகிற்குவியல்களிடையே, திரௌபதி யாதொரு களைப்புமின்றி நிற்கிறாள்.

என்னையும், என்னிடத்தில் செய்யும் சரணாகதியையும் களங்கப்படுத்தவும் செய்கிறாய். அதனால் சோகத்தை விட்டொழி (*மா ஶுச:*).

2. உனது மனநிலை, எண்ணங்களின் ஓட்டம், நடத்தை – இவற்றின் தூய்மைக் குறைவை நினைத்து வருந்துவதை விடு. அதில், நான் அக்கறை செலுத்துவேன்.

3. கீதையில், இரண்டாவது அத்தியாயத்தின் ஏழாவது சுலோகத்தில் அர்ஜுனன், கண்ணனைச் சரணடைகிறார். மேலும், தன–தானியங்கள் நிறைந்த, ஓர் எதிரியுமற்ற இப்பூவுலகு கிடைப்பினும், தேவர்களுக்கு அதிபதியாகிக் குற்றேவல் புரியும்படி அப்பொன்னுலகு கிடைப்பினும், என் புலன்களை வருத்தும் இத்துயரத்திற்கு மாற்றில்லை என்று எட்டாவது சுலோகத்தில் உரைக்கின்றார்.

இதற்குக் கண்ணன், பார்த்தனிடம், "உனது கருத்து பிழையானது. பௌதிக, அழிவுறும் உலகியற்செல்வங்களினால் ஒருக்காலும் ஒருவரது துயரம் நீங்காது. அதற்கு மாற்றாகக் கூறப்படும் சரணாகதியையும் நன்கு அனுஷ்டித்துவிட்டு, பின்னர் துயரம் கொள்வதனால் பெருங்குற்றமும் செய்கிறாய். என்னிடம் உன்னைச் சமர்ப்பணம் செய்துவிட்டு, அதன் பின்னரும் பாரத்தைத் தலையில் சுமந்து கொண்டு நிற்கிறாய்" என்று உரைக்கிறார்.

4. சரணாகதி செய்துவிட்டு பக்தன் இகலோகம்–பரலோகம், நற்கதி–தீயகதி – இவற்றைப் பற்றிய கவலையை ஒழித்துவிட வேண்டும். இவ்விஷயத்தில் குலசேகராழ்வார் உரைப்பது—

தி₃வி வா பு₄வி வா மமாஸ்து வாஸோ
நரகே வா நரகாந்தக ப்ரகாமம் ।
அவதீ₄ரித ஶாரத₃ாரவிந்தௌ₃
சரணௌ தே மரணேऽபி சிந்தயாமி ॥

"நரகாசுரனை மாய்த்தவனே! மண்ணுலகோ, விண்ணுலகோ, அருநரகமோ, எங்கும் பிறவி பெறச் சித்தமாயிருக்கிறேன். அதில் என் சங்கல்பம் எதுவுமில்லை. சரத்காலத்துத் தாமரையைப்

பழிக்கும் எழில்மிகு நின் இணையடிகள் இரண்டையும், இறக்கும் தறுவாயிலும் நான் மறவாதிருக்க வேண்டும்!''

சில குறிப்புகள்

சரணாகதன், 'நீ எனையன்றி இலை கண்டாய். நாரணனே! நான் உனையன்றி இலை' என்ற உணர்வோடு வாழ்கிறான். அவன் கவலை, அச்சம், ஐயப்பாடு – இவையனைத்தையும் வேரறுத்து விடுகிறான். பக்தி கண்ணோட்டத்தில் பார்ப்பின், மாசுகளனைத்தும் நம்பிக்கையின்மையால்தான் தலையெடுக்கின்றன.

இறைவன்பால் மனம் திரும்புவதால், அது பூரணருடன் உறவை ஏற்படுத்தி, மகாவிசுவாசத்தை ஊட்டி, ஏற்கனவே ஒட்டிக் கொண்டிருக்கும் சம்சார வாஸனைகளையும், புலனின்ப வாஸனைகளையும் வேருடன் அழித்துவிடுகிறது.†

திடசம்பந்தம் அல்லது விசுவாசம் என்றால் என்ன?

கவலை, அச்சம், ஐயம், வருத்தம், சோதித்துப் பார்க்கும் உந்துதல், விபரீத பாவனைகள் – இவை நசித்தலே திடசம்பந்தம் கொள்வதாகும். இது மேலும் விவரிக்கப்படுகிறது.

1. கவலையற்றிருத்தல்:–

சரணாகதன், தனது என்று கருதப்படும் தனதுடைமையான பொருட்களோடு, தன்னையும் சேர்த்துக் கண்ணனிடம் சமர்ப்பித்த அக்கணமே, இம்மை–மறுமை பற்றிய கவலைகள் தீர்ந்துவிடுகின்றன. பிழைப்பது எப்படி? வாழ்வது எங்ஙனம்? வசிப்பது எங்கே? என் நிலை என்ன ஆகும்? என் கதி என்ன ஆகும்? இம்மாதிரியான கவலைகள் முற்றிலும் அகல்கின்றன.

எனது வாழ்க்கை தூயதா? ஆன்மிகத்திற்குத் தகுதியானதா? அடியார்களுடன் சேர்ந்து வாழத் தகுதி வாய்ந்ததா? ஏனெனில்,

---

† பகவானுடன் கொள்ளும் உறவு உறுதி பெறும்போது, உலகையும் உடலையும் சார்ந்து நிற்றல் முடிவு பெறுகிறது. உயிர் வாழ்வதில் ஆசை, மரணபயம், செயல் புரிவதில் இச்சை, சுகம் பெறுவதில் நாட்டம் – இந்நான்கும் அறவே அழிந்துவிடுகின்றன.

எனது மனோவிருத்திகள் (அந்தக்கரணத்தில் எழும் எண்ணங்கள்) தூய்மையானவை இல்லை என்பவை போன்ற எண்ணங்கள் பக்தனுக்குத் தோன்றலாம். எண்ணங்கள் தூயனவோ, தூய்மையற்றனவோ, 'என்னுடைய எண்ணங்கள்' என்ற அபிமானமே தவறானதாகும். எப்பொழுது தன்னையும், தன்னுடைமைப் பொருட்களையும் பகவானிடம் சமர்ப்பித்தாயிற்றோ, பின் தனியாக என் மனம், என் புத்தி, என் புலன்கள், என் உடல் என்று எப்படி இருக்க முடியும்?

இவை போன்ற கவலைகள் தோன்றினால், துன்புற்றவன் சரணடைதல் போன்று 'ஆர்த்த பிரபத்தி' செய்ய வேண்டும். 'ஏ நாத! என் பிரபுவே! காத்தருள்வாய்! காத்தருள்வாய்!' என்று தலைவனைக் கூவியழைக்க வேண்டும். ஏனெனில், அவர் என் தலைவர், என் எல்லாம் வல்ல யஜமானர். பின்பு, நான் ஏன் கவலை கொள்ள வேண்டும்? ஏற்கனவே பகவானும் கூறியிருக்கிறார்— 'நீ கவலையுறாதே' (*மா ஶுச:*) என்று. எனவே கவலையற்று, மனமார ஆண்டவனிடம் அடிபணிந்து 'ஏ நாத! இவ்வளவும் உங்கள் செயல், உங்களுக்குத் தெரியாததா இது?' என முறையிட வேண்டும்.

எல்லாம் வல்ல எம்பெருமானைப் புகல் என அடைந்தாயிற்று. மறுபுறம் கவலையும் விட்ட பாடில்லை. இந்த இரண்டும் முரண்பட்ட நிலைகள். ஏனெனில், இறைவனை அடைக்கலம் கொண்ட பின், கவலைக்கேது இடம்? கவலை தொடர்கிறது எனில், பகவானைப் புகல் அடைந்தது எப்படி? ஆகவே, சரணாகதி செய்தவன் எண்ணிப் பார்க்க வேண்டும். பகவான், 'நான் எல்லாப் பாவங்களினின்றும் விடுவிக்கிறேன்' எனக் கூறும்போது, இந்த மனத்துடிப்பெல்லாம் நீங்க, "நான் ஏதும் செய்தாக வேண்டுமா? நானோ உங்கள் கைப்பாவை. பகவானே! என் மன ஓட்டங்களை என்னுடையவை என்று நான் எண்ணியதேயில்லை. நாதா! உடல், புலன்கள், மூச்சு, மனம், அறிவு – இவை ஒருபோதும் என்னுடையவை எனத் தோன்றியதில்லை. ஆனால், என்னை முற்றும் உங்களுக்கு ஒப்படைத்த பின்பும், எப்பொழுதேனும் 'இவை என்னுடையவை' என்ற எண்ணம் தோன்றுகிறதே. பிரபோ! நீங்கள்தான்

என்னை இக்குற்றத்திலிருந்து மீட்க வேண்டும்'' என்று கூறிவிட்டுக் கவலையற்றிருக்கலாம்.

2. அச்சமற்றிருத்தல்:–

விஷ ஜந்துக்களால் வெளியிலிருந்து 'உடலுக்கு' பயம் தோன்றுவதுபோல், ஒழுக்கக் குறைவினால் ஒரு பக்தனுக்கு மனத்தில் அச்சம் தோன்றுகிறது. சரணாகதனுக்கு இவ்விரண்டு விதமான அச்சமும் விலகிவிடுகின்றன! பதஞ்ஜலி முனிவர் மரணபயத்தையே ஐந்தாவது துன்பமாகக் கருதுகிறார்.† பேரறிஞர்களையும் வருத்தும் இந்த அச்சம் என்னும் பகையை முற்றிலும் சரணாகதி நீக்கிவிடுகிறது.

'எனது எண்ணங்கள் தூய்மை கெட்டுவிடும்' என்ற அச்சம் தோன்றுவதுண்டு. இந்த பயவுணர்வையும் சாதகன் தன் உள்ளத்திலிருந்து நீக்கிவிட வேண்டும். 'நான் பகவானின் கருணையில் ஆழ்ந்திருக்கிறேன். எனக்கு எதனாலும் அச்சம் இல்லை' என்ற எண்ணங்கள் தோன்றுவதும், எனது என்ற 'மமதை'யால்தான். இந்த எண்ணமும் தூய்மையற்றதுதான். இங்கும் உள்ளம் 'எனது' என்ற மமதையினால்தான், அதன் தூய்மை என்ன ஆகும்? என்ற அச்சவுணர்வும் தோன்றுகிறது. 'மமதையாகிய மாசு எரிந்து போகட்டும்' என்பர் கோசுவாமி துளசிதாசர். இதனால் ''எண்ணம், மனம் – இவற்றில் 'எனது' என்ற உணர்வை ஒழிப்பேன்'' என்ற உறுதி சரணாகதனுக்கு வரவேண்டும். 'மனம் என்னுடையதில்லையானால், நான் எதற்குப் பயப்பட வேண்டும்? பகவானது கிருபையே எல்லாம். அவரது கிருபையே எங்கும் நிறைந்துள்ளது.' இந்த நினைவே மனத்திற்கு எவ்வளவு அமைதியையும் ஆனந்தத்தையும் அளிக்கிறது!

பலருக்கும் ஓர் ஐயம் உண்டு. பகவானைச் சரணடைந்து அவரைப் பூஜிப்பதால் பகவான் என்றும், பக்தன் என்றும் இரண்டு என்று வந்துவிடுகிறதே? இருமை என்று வந்து விட்டால் பயம் உண்டாகுமே என்ற ஐயப்பாடு பொருளற்றது.

---

† *அவித்$_3$யாஸ்மிதாராக$_3$த்$_3$வேஷாபி$_4$நிவேஶா: க்லேஶா: ।*
(யோக$_3$த$_3$ர்ஶநம் 2/3)

'த்$_3$விதீயாத்$_3$வை ப$_4$யம் ப$_4$வதி' (ப்$_3$ருஹதா$_3$ரண்யக உபநிஷத்$_3$) என்பது வேதவாக்கியம். இப்படி ஏற்படும் ஐயத்திற்கு ஆதாரம் இல்லை. பயம் வெளிப்பொருளால் தோன்றும்; தன்னிடம் தோன்றாது. பயம் பிரகிருதியின் விகாரமான உடலினாலும் உலகினாலும் தோன்றும்; இவற்றின் தொடர்பினாலும் தோன்றும். ஆன்மாவும் பிரகிருதியும் வேறான தன்மை கொண்டதால், நீடித்தத் தொடர்புக்கு வாய்ப்பில்லாததால் பயம் தோன்றக் காரணமுண்டு. பிரகிருதி—ஜடம்; ஆன்மா—சேதனம் (உணர்வு மயமானது). பிரகிருதி மாறுதலுக்குட்பட்டது; ஆன்மாவுக்கு மாறுதலில்லை. பிரகிருதி தானே தோன்றாது; ஆன்மா ஸ்வயம் பிரகாசமானது.

இறைவன் இரண்டற்றவர்; ஆன்ம வடிவானவர். ஜீவன், அவருடைய அழிவிலா அம்சமும் வடிவும் ஆனவர். இதனால் ஆன்மாவான ஜீவனுக்கு, ஆன்ம வடிவான பரமாத்மாவிடமிருந்து பயம் எப்படித் தோன்றும்? குழந்தை தாயிடமிருந்து விலகியிருப்பின் அச்சம் கொள்வதில் நியாயம் உண்டு. தாயின்மடி சேர்ந்துவிட்டால் அச்சம் நீங்கி சுகமடையும். தாய், சேய் – இவர்களுக்குள் பேதபாவம் தெரிகிறது. ஆனால், அதுபோன்று இறைவனுக்கும் அடியவனுக்கும் பேதபாவம் என்பது ஸாத்யமில்லை. எனவே, பகவானைப் புகலடைந்தவனுக்கு அச்சம் என்பது அறவே நீங்குகிறது.

3. துயருறாமல் இருத்தல்:–

நடந்ததை நினைத்து வருந்துவதே துயரம். தர்க்கரீதியாக இது பயனற்ற செயல். இது மிகவும் தவறான செயல். எது நடந்து முடிந்துவிட்டதோ, கட்டாயம் நடக்க வேண்டியதோ, அதில் மாற்றம் ஏற்படுத்த முடியாது. எது நடக்க முடியாதோ, அது ஒருபோதும் நடக்காது. எது நடந்து கொண்டிருக்கிறதோ, அது நடக்க வேண்டிய செயலே ஆகும். இவற்றில் துயர் கொள்வது என்ற பேச்சுக்கே இடமில்லை.† சரணாகதன்

† 1. *ராம கீந்ஹ சாஹஹி(ம்) ஸோஇ ஹோஈ ।*
கரை அந்யதா$_2$ அஸ நஹி(ம்) கோஈ ॥
(ஸ்ரீராமசரிதமாநஸம் 1/128/1)

இவற்றை பகவானின் நன்மை பயக்கும் மங்களமயமான ஏற்பாடாகவே காண்கிறான். (*'நன்றே வருவதெலாம் நமக்குப் பரமொன்றிலதே'* என்பார், வேதாந்த தேசிகர் என்ற வைணவ ஆசார்யர்.) துயரம் அவனை அணுகுவதே முடியாதது.

4. சந்தேகம் கொள்ளாதிருத்தல்:–

சரணாகதன் 'நான் இறைவனுடையவனாகி விட்டேனா? இறைவன் என்னை ஏற்றுக்கொண்டு விட்டாரா?' என்ற ஐயப்பாடுகளையும் அறவே அகற்றவேண்டும். தொன்றுதொட்டு எனக்கும் எம்பெருமானுக்கும் ஒழிக்க முடியாத உறவு உண்டு. (*'உறவேல் நமக்கிங்கு ஒழிக்க ஒழியாது' – நாச்சியார் திருமொழி.*) இனியும் இத்தொடர்பு அறுக்க முடியாது. நான், என் அறிவீனத்தினால் என்னைப் பரமனிடமிருந்து வேறாகக் கண்டேன். ஆனால், நான் என்னைப் பரந்தாமனிடமிருந்து எவ்வளவுதான் வேறெனக் கருதினாலும், நான் ஆண்டவனை விட்டுப் பிரிய முடியாது. எத்தனைதான் விரும்பினாலும் நடவாதது அது. நான் எவ்வளவு தூரம் எம்பெருமானை விட்டு விலக எண்ணினாலும், அது முடியாது.

ஏனெனில், அது இயற்கையானதன்று. *'மம ஏவ அம்ஶ:' (கீதை 15/7)* (ஜீவன் எனது அம்சமே) என்ற பகவத் வசனத்தின் உட்பொருளைச் சிந்தித்து, 'நான் பகவானுடையவன், பகவான் எனக்குரியவர்' எனும் உறுதிகொண்டு, இத்தகைய ஐயத்தை முற்றிலும் நீக்கிவிட வேண்டும்.

5. சோதனை செய்யாதிருத்தல்:–

'எனது சரணாகதி உண்மையானதா? எனக்கு சரணாகதனுடைய

இராமன் என்ன நினைக்கிறானோ, அதுதான் நடக்கும். வேறு மாதிரியாகச் செய்வேன் என்றால், அது நடக்காது.

2. *ஹோஇஹி ஸோஇ ஜோ ராம ரசி ராக$_2$ா ।*
கோ கரி தர்க ப$_3$ட$_4$ாவை ஸாக$_2$ா ॥
(ஸ்ரீராமசரிதமாநஸம் 1/52/4)

இராமன் என்ன திட்டமிட்டானோ, அதுதான் நடக்கும். இதில் தர்க்கம் பண்ணினால் அதுதான் (தர்க்கம்தான்) வளரும்.

லட்சணங்கள் உண்டாகிவிட்டனவா? இவை இல்லாவிட்டால் சரணாகதிக்கு என்ன பொருள்?' என்று எம்பெருமானைப் புகலடைந்தவன் சோதித்துப் பார்க்க வேண்டாம். பரிபூர்ண பிரபத்தி (சரணம் அடைதல்) செய்த தன்னிடத்தில் குணங்களின் (அதாவது, கீதை 12/13–19ல் (*'அத்₃வேஷ்டா.....'*) கூறப்பட்ட ஆத்ம குணங்கள்) குறைபாடு எவ்வாறு ஏற்பட முடியும்? என்ற விசுவாசமே ஒருவனுக்கு குணபூர்த்தியைக் கொடுத்துவிடும். ஆகவே, சோதித்துப் பார்க்கத் தேவையில்லை.†

6. விபரீதமான தீர்மானம் கொள்ளுதல்:—

'நான் உண்மையில் பகவானைச் சார்ந்துள்ளேனா?' என்ற விசுவாசக் குறைவினால் மாறான முடிவு தோன்றக் கூடாது. பகவானுக்கும் ஆன்மாவுக்குமான உறவு எல்லையற்றது; இடையறாதது; என்றுமுள்ளது என்ற பேருண்மை பதியாததால் ஏற்படும் தவறு இது. இத்தவறு நீங்கினால் விபரீதமான முடிவும் அகன்றுவிடும். தூய உள்ளத்துடன் பகவானிடம்

---

† இதை நன்றாகப் புரிய வைக்கக்கூடிய கதை ஒன்று உண்டு. ஒரு தாயாருக்கு மூன்று பிள்ளைகள். பெரிய பிள்ளைகள் இருவரும் வீட்டுவேலைகளில் மிகவும் பொறுப்பானவர்கள். மூன்றாவது பிள்ளை அப்பாவி. அவனுக்கு ஒன்றும் செய்யத் தெரியாது. ஒரு நாள் அவர்களது தாயார் இறந்துவிட்டாள். பெரியவர்கள் இருவரும், 'தாயின் அஸ்தியைக் கங்கையில் கரைத்துவிட்டு வா. இதையாவது செய்' என்று அந்த அப்பாவி சகோதரனிடம் சொன்னார்கள். சரியென்று ஏற்றுக் கொண்டு மூன்றாமவன், தாயின் அஸ்தியை எடுத்துக் கொண்டு வீட்டிலிருந்து கிளம்பினான்.

அவனது வீட்டிலிருந்து கங்கை முந்நூறு மைல். அவன் கங்கைக்கு நடந்து சென்று கொண்டிருந்தான். மிகவும் களைத்து விட்டான். வழியில் ஒருவரைக் கேட்டான்— 'ஐயா! கங்கை இன்னும் எவ்வளவு தூரம்?' 'பையா! நூற்றைம்பது மைல் வந்துவிட்டாய். இன்னும் நூற்றைம்பது மைல் போக வேண்டும்.'

பையனுக்குக் கவலை மிகுந்துவிட்டது. 'இன்னும் அத்தனை தூரம் எப்படிச் செல்வேன்? எப்பொழுது கங்கை சென்றடைவேன்?

சரண்புகுபவனிடத்தில், கவலையும் அச்சமும் துயரமும் ஐயமும் தோன்றா.

திருமணத்திற்குப்பின் வேற்றிடம் புகும் மணப்பெண், தன் பிறந்த வீட்டின் தொடர்பறுந்து, இயற்கையாகவே புகுந்த வீட்டுடன் திடமான சம்பந்தம் கொள்வதைப் போன்ற செயல், சரணாகதி. அவளுக்குப் பேரன் பிறந்து, அவனுடைய மனைவி, வீட்டில் கலகம் செய்யும்போது, 'ஓர் அயலகத்துப் பெண் தன் வீட்டில் இடைஞ்சல் செய்கிறாளே' என்றுதான் கவலைப்படுகிறாள். ஆனால், அவளே ஓர் அயல் வீட்டிலிருந்துதானே இங்கு வந்திருக்கிறாள்? அந்த உண்மை கிழவிக்குச் சிறிதும் நினைவு வருவதில்லை. அவ்வளவு தூரம் புகுந்த வீட்டுடன் ஒன்றி நிற்கிறாள்!

உண்மையில், உலகியலில் நாம் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளும் நிலையற்ற பொருட்களுடன் நமக்கு இத்தனை பற்றுதல் தோன்றுமானால், நாம் எந்த பகவானின் அம்சமோ,

---

எப்பொழுது திரும்புவேன்?' யோசித்தான். அஸ்தியை அங்குள்ள காட்டுப்புதரில் வீசினான். அருகிலிருந்தக் குளத்திலிருந்து நீரைக் குடத்தில் நிரப்பிக் கொண்டான். கங்கைக்குப் போனால் கங்கை நீர் கொண்டு வரவேண்டுமல்லவா? நீர் நிரம்பிய குடத்தை எடுத்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பிவிட்டான்.

அண்ணன்மார்கள் யோசித்தார்கள்— 'அதற்குள்ளாகவா கங்கைக்குப் போய்விட்டு வந்துவிட்டான்?'

மூத்த அண்ணன் கேட்டான்— 'கங்கைக்குப் போய்விட்டுத்தானே வந்தாய்?'

'ஆம். கங்கையில் பிரம்ம குண்டத்தில் அஸ்தியைக் கரைத்துவிட்டுத்தான், இக்குடத்தில் கங்கை நீர் கொண்டு வந்திருக்கிறேன்' என்று பொய் சொன்னான்.

அண்ணன்மாருக்கு இது பொய்யென புரிந்துவிட்டது. அடுத்த நாள் மற்றொரு அண்ணன் மூன்றாமவனைக் கேட்டான்— 'தம்பி! நீ உண்மையிலேயே கங்கைக்குப் போனாயா? கங்கையில் உண்மையாக அஸ்தியைக் கரைத்தாயா?' 'ஆம். உண்மையாகவே நான் கங்கைக்குச் சென்று அஸ்தியைக் கரைத்தேன்' என்றான்

அந்தத் தலைவனுடன் நமக்கு எத்தனை பற்றுதல் ஏற்பட்டிருக்க வேண்டும்! இதுவன்றோ உண்மையான, நித்யமான சம்பந்தம்! இறைவனுடனான தொடர்பை நிலைப்படுத்திக் கொள்ள, உலகியலில் நாம் ஏற்படுத்திக் கொண்டுள்ள மற்றைய சம்பந்தங்களைத் தியாகம் செய்வது மிக அவசியமானது.

தூய மனத்துடன் சரணாகதி செய்தபின் எண்ணம், ஒழுக்கம் – இவற்றில் குறையை உணர்ந்தாலோ, கெட்ட எண்ணங்கள் உதித்தாலோ, சூழ்நிலையின் தாக்கத்தால் வயமிழந்து தீயசெயல் செய்ய நேரிட்டாலோ, உள்ளத்தில் கழிவிரக்கம் தோன்றலாம். இதற்காக வேறு கழுவாய் மேற்கொள்ளத் தேவையில்லை. பகவான் கிருபை புரிந்து, அவனுடைய பாவங்களை நீக்கிவிடுகிறார்.

ஸ்வபாத$_3$மூலம் ப$_4$ஜத: ப்ரியஸ்ய
த்யக்தாந்யப$_4$ாவஸ்ய ஹரி: பரேமு: ।
விகர்ம யச்சோத்பதிதம் கத$_2$ஞ்சித்$_3$
து$_4$நோதி ஸர்வம் ஹ்ருதி$_3$ ஸந்நிவிஷ்ட: ॥

(ஸ்ரீமத் பாகவதம் 11/5/42)

"இங்கே பார்! நேற்று இரவு அம்மா கனவில் வந்து என்னிடம், 'உன் தம்பி கங்கைக்குப் போகவே இல்லை. நடுவே அஸ்தியை எங்கேயோ போட்டுவிட்டு வந்துவிட்டான்' என்று சொன்னாள். அம்மா சொல்வது உண்மையா? நீ சொல்வது உண்மையா?"

சின்னவன் கேட்டான்— "அம்மா நூற்றைம்பது மைல் இங்கே வந்து உன்னிடம் புகார் சொல்வதற்குப் பதிலாக, நூற்றைம்பது மைல் நடந்து கங்கைக்குப் போய் இருக்கலாமே! இங்கு எதற்கு வந்தாள்?"

இந்தக் கதையிலிருந்து என்ன தெரிகிறது? பகவானிடம் சரணடைந்த பிறகு, அதைச் சோதித்துப் பார்ப்பது தவறு. என்னிடம் ஸாது லட்சணம் இல்லாவிட்டால் நான் உண்மையில் சரணாகதிக்குத் தகுதியில்லை என்று ஏன் நினைக்க வேண்டும்? நான் சரணாகதி பண்ணின பிறகு, என்னிடம் அதற்குத் தகுதியான நற்பண்புகள் ஏன் வாரா? என்ற நம்பிக்கை வேண்டும். (கதையில்) 'அம்மா இங்கே வந்ததற்குப் பதில், அங்கே போயிருக்கலாமே' என்று சொல்வது போலப் பேசிப் பயனில்லை.

"வேறு எதிலும் சிந்தனையைச் சிதறவிடாமல், பரமேசுவரரான ஹரியினுடைய திருவடிகளிலேயே அடைக்கலம் புகுந்துவிட்ட பக்தன், ஏதோ ஒரு சமயம் தவறான ஒரு செயலைச் செய்துவிட்டானேயானால், அவன் இதயத்தின் மாசுகளை நீக்கிச் சுத்தப்படுத்திவிடுகிறார், பகவான்."

பகவான் மெய்யன்பனின் அநந்ய பாவத்தைத்தான் கணிசிக்கிறார். குணங்களையோ, குற்றங்குறைகளையோ அன்று.† பகவான், சரணாகதனின் ஒன்றிய நிலையிலேயே குறியாக இருக்கிறார். ஏனெனில், எப்போதுமே அடியவன் ஆண்டவனைச் சேர்ந்தவன். அந்த சம்பந்தம் நித்யமானது; குற்றங்குறைகளோ தோன்றி மறைவன; ஸ்வரூபத்தில் சேராதவை. பகவானுடைய பார்வையோ ஜீவனின் நிஜ ஸ்வரூபத்தைப் பற்றியது.

சேற்றில் விழுந்த குழந்தையை எடுக்கும் தாயின் கருத்து முழுவதும் குழந்தையின் மேல்தான். சேற்றின் அருவருப்பைப் பற்றியதன்று. குழந்தையும் தாயின் அரவணைப்பையே நாடுகிறது. சுத்தம் செய்து கொண்டபின் தாயை அணைத்துக் கொள்ள வேண்டும் என்று அந்தக் குழந்தைக்கும் தோன்றுவதில்லை. 'துச்சாதனனின் உதிரத்தில் தோய்த்த பின்பே கூந்தலை அள்ளி முடிப்பேன்!' என்று கூறிய திரௌபதிக்கு, அவன் மீது எவ்வளவு வெறுப்பும் சினமும் கொதித்து வந்தன! ஆனால், கண்ணனை அவை நடுவில் பாஞ்சாலி விளித்தவுடன் தோன்றிவிட்டாரே! காரணம் திரௌபதி அத்தனை அநன்ய நிஷ்டை பகவானிடம் கொண்டிருந்ததுதான்.

அநன்ய பக்தியில் இருவிதமான பாவங்கள் உள்ளன.

---

† *ரஹதி ந ப்ரபு₄ சித சூக கிஏ கீ ।*
கரத ஸுரதி ஸய ப₃ார ஹிஏ கீ ॥

(ஸ்ரீராமசரிதமாநஸம் 1/29/3)

பிரபுவின் மனத்தில், தம் பக்தர்களால் செய்யப்பட்ட தவறுகள் நினைவுக்கு வருவதில்லை; உடனே மறந்துவிடுகிறார். அவர்களுடைய குணங்களையே (அவை மிகச் சிறியனவாயினும்) நூற்றுக்கணக்கான தடவை நினைவுபடுத்திக் கொள்கிறார்.

1. பகவான், என்னைச் சேர்ந்தவர் (*ப$_4$க$_3$வாந் ந மே அந்ய: இதி ப$_4$ாவ:*). 2. நான், அவரைச் சேர்ந்தவன் (*ந அஹம் ப$_4$க$_3$வதோ அந்ய: இதி ப$_4$ாவ:*). இரண்டு பாவங்களிலும் இறைவனுடனான தொடர்பு சமமானதே. பின்னும் அவர் தன்னைச் சேர்ந்தவர் என்பதில், தனக்கு அவர் மூலம் எல்லாம் சாதித்துக் கொள்ளத் தோன்றுகிறது. 'எனக்கே உரிய அவர், ஏன் என் ஆசைகளைப் பூர்த்தி செய்து கொடுக்கக் கூடாது?' என்ற எதிர்பார்ப்பும் அதிகம். 'நான் அவரைச் சேர்ந்தவன்' என்ற பாவத்தில் தன் முனைப்பு அவ்வளவு இல்லை. இங்கு உடையவன் அவரானபடியால், அவரது உடைமையான எனது பொறுப்புகள் அவரதேயானது. என் வரையில் பொறுப்பு மிகக்குறைவு. என்னை ஆளுமை செய்பவர் அவரே. இவ்வாறு உயரிய சாதகன், பகவானின் திருவுள்ளத்தோடு, தன் உள்ளக்கிடக்கைகளை இணைத்து விடுவான். பகவான் மீது தனக்கேதும் உரிமை இருப்பதாகக் கருதமாட்டான். மற்றவர்கள் இறைவன் மீது அதிகாரம் செலுத்த எண்ணுவர். தனது எண்ணம் நிறைவேறினால், தனக்காக பகவானும் இவ்வளவு சிரமப்பட வேண்டுமா? என்ற தயக்கம் ஏற்படுமாகில், அது உண்மையான பிரபத்தி. எண்ணம் நிறைவேறியதில் ஆனந்தம் தோன்றுமாகில், சரணாகதி உண்மையானதன்று. உண்மையில் அடைக்கலம் புகுந்தவன் உடல், புலன்கள், மனம், அறிவு – இவற்றின் பிரதிகூலமான சூழ்நிலையிலும், 'யாவும் இறைவனின் திருவுள்ளம்' என்று அறிந்து ஆனந்தமாகவே இருப்பான்.

பகவானிடம் அடைக்கலம் புகுந்த பக்தனுக்குச் சிறிதுகூடத் தனக்காகச் செய்வதற்கு என்று ஏதும் இருப்பதில்லை. ஏனெனில் அவன், தன்னுடையவை என்று மமதைக்குரிய அனைத்தையும் சேர்த்துத் தன்னையே ஈசுவரார்ப்பணம் செய்து முடித்தவன். அவன் ஒப்படைத்தவை யாவுமே பகவானுடையவைதானே! இந்த நிலையில் செய்வதற்கும் செய்விப்பதற்கும் உரிய எல்லாச் செயல்களும் பரமனின் கடமைகள் ஆகிவிட்டன. அவன் இந்த நிலையை அடைந்த பிறகு, மிகக் கடினமான அச்சுறுத்தும் நிகழ்ச்சிகள், சூழ்நிலைகள்

முதலியவற்றிலும் தன்மீது பகவான் தனிப்பெருங்கருணை கொண்டுள்ளதாக எண்ணி, எப்போதுமே அகமகிழ்கிறான்.

முனிவர் காகபுசுண்டி, முன்னர் அந்தணராயிருந்து, லோமச ரிஷியின் சாபத்தால் சண்டாளப் பறவையான காகமாக மாறினார். இதனால், அவர் துளியும் அச்சமோ, வருத்தமோ கொள்ளவில்லை. இதை இறைவனின் சீரிய ஏற்பாடாகவே கண்டார். கண்டதுடன் 'உள்ளத்துள் உறையும் ரகுநாதனே ஒவ்வொருவரையும் தூண்டுகிறார்' *('உர ப்ரேரக ரகு$_4$வம்ஸ விபூ$_4$ஷந ॥' – ஸ்ரீராமசரிதமாநஸம் 7/113/1)* என்று மனத்திற்குள் சொல்லிக் கொள்கிறார். அவர், கருட பகவானிடத்தில் தம் கதையைச் சொல்லும் போதும் வருந்தினாரில்லை. அவரது மனநிலையைக் கண்டு மகிழ்ந்த லோமச ரிஷி, அவர் தலையில் கை பதித்து, அவருக்கு இடையறாத ராம பக்தி இருக்கும்படி ஆசீர்வதித்து, விருப்பப்படி ரூபம் தரிக்கும் வரத்தையும், ஒரு யோஜனை விஸ்தீர்ணம் மாயாபிரபாவத்தை ஒடுக்கும் ஆற்றலையும் அளிக்கிறார். இவற்றை ஏற்று அசரீரி பேசியது— 'ரிஷியே! நீர் கூறியதுபோல் முற்றும் நடந்தேறும். இவன் மனம்–மொழி–மெய்களால் என் பக்தன்.'

இச்சொற்களைக் கேட்டு, எப்போதுமே இறைவனின் சீரிய ஏற்பாட்டில் மகிழ்பவரான காகபுசுண்டி கூறலானார்— "நிர்குண ஸ்வரூபத்தின் சிறப்பை மிகுந்த ஆர்வத்துடன் என்னிடம் எடுத்துரைக்க முற்பட்ட லோமச மகரிஷியிடம் நான், பகவானின் ஸகுண ஸ்வரூபத்தையே வர்ணிக்குமாறு விடாமல் வற்புறுத்திக் கேட்டேன். லோமச மகரிஷி பொறுமையிழந்து என்னைக் காகப் பறவையாகுமாறு சபித்தார். சிறிதும் வருத்தமின்றி அதை ஏற்றேன். தனித்த இடத்தில் இடையறாது ஸ்ரீராம கதையைக் கேட்பவருக்கு உரைத்து வந்தேன். முனிவருக்கும் கிடைக்காத அரிய பேற்றையே வரமாகப் பெற்றேன். இறைவழிபாட்டின் பெருமையைப் பாரீர்!" இந்நிகழ்ச்சி ஸ்ரீராமசரிதமானசத்தில் இடம் பெறுகிறது.

'பஜந ப்ரதாப' (வழிபாட்டின் பெருமை) என்பதன் பொருள், இறைவனது நியதியில் எப்பொழுதும் இன்பம் காணுதல். மிக

மோசமான சூழ்நிலைகளிலும் பகவானிடம் பிரேமை கொண்ட பக்தனின் ஆனந்தம் அதிகரிக்கவே செய்யும். ஏனெனில், பிரேமையின் இலக்கணமே, 'அது கணந்தோறும் வளர்ந்து கொண்டிருப்பது' என்பதாகும்.

தன்னுடையது என்றால், எப்போதுமே யாருக்குமே அதில் பிடிப்பு உண்டு என்பது நியதி.† பகவான் ஜீவ சமுதாயத்தையே தமக்கு உரியதாகவும் இனியதாகவும் எண்ணுகிறார். ஆனால், ஜீவனோ தனக்கு முற்றிலும் மாறுபட்ட பிரகிருதியின் ஒரு பரிணாமமான உடலையும் உலகையும் தனதாக எண்ணிக் கொள்வதுடன், பகவானை ஒதுக்கியும் விடுகிறான். இவனுக்கு பகவான் யாரோ அந்நியன் போல் ஆகிய போதிலும், இந்த ஜீவனை பகவான் ஒதுக்கி விடுவதில்லை. அவரால் அப்படி ஒருக்காலும் செய்யவும் முடியாது. ஏனெனில், ஒவ்வொரு ஜீவனும் அவரது பிரிக்க முடியாத கூறு ஆகும். எனவே, உயிர்கள் எல்லாவற்றுடனும் பகவானின் ஆத்மீயமான ஒட்டுதல் குறைவுபடாமல், முழுமையாக இயற்கையாகவே இருந்து வருகிறது. அவர் இந்த ஜீவகோடிகளை உய்விக்கவே அவதரிக்கவும் செய்கிறார். அன்பர்களைக் காப்பதும், தீயோர்களை அழிப்பதும், அறத்தை நிலைநிறுத்துவதும் அவதாரத்தின் நோக்கமாகும்.

பரித்ராணாய ஸாதூ$_4$நாம் விநாஶாய ச து$_3$ஷ்க்ருதாம் ।
த$_4$ர்மஸம்ஸ்த$_2$ாபநார்த$_2$ாய ஸம்ப$_4$வாமி யுகே$_3$ யுகே$_3$ ॥
(ஸ்ரீமத் பகவத்கீதை 4/8)

பகவான் அவதரிப்பதன் பலன் ஜீவ சமுதாயத்திற்குத்தான். அவருக்கு வேறு தனியான நன்மை எதுவும் இல்லை. அவதாரங்களின் மூலம் பகவானின் உணர்வொன்றிய நிலை, கருணை, நலம் நாடும் பாங்கு, நட்பு, ஆசையின்மை, வள்ளல் தன்மை ஆகிய இவை தெரிய வருகின்றன. இந்நோக்கிலேயே

† 'எல்லோருமே பகவானுக்கு இனியவர்தாம். ஏனெனில், அனைவருமே அவரிடமிருந்து தோன்றியவர்தாம்.'
(ஸ்ரீராமசரிதமானஸம், உத்தரகாண்டம்)

அர்ஜுனனிடமும் கண்ணன், *'மத்$_3$ப$_4$க்தோ ப$_4$வ, மந்மநா ப$_4$வ, மத்$_3$யாஜீ ப$_4$வ, மாம் நமஸ்குரு'* – 'மனத்தை என்னிடம் அளித்தவனாகவும், என் பக்தனாகவும், என்னையே பூஜிப்பவனாகவும் வணங்குபவனாகவும் இரு' என்று கூறியது, ஜீவகோடிகளைத் தம்மிடம் ஈடுபடுத்த வேண்டும் என்பதற்கே. இறைவனிடம் ஈடுபட்ட ஜீவன், உலகியலிலிருந்து வேறுபடுகிறான். இறைவனிடம் ஈடுபாடு இல்லாமலிருப்பதாலேயே துயரம், மன உளைச்சல், மீண்டும் மீண்டும் பிறப்பிறப்பு முதலிய இன்னல்கள் ஏற்படுகின்றன.

இறைவன் எதை விதித்தாலும், அது உலகின் அனைத்துயிர்களின் நலனுக்காகவே ஆகிறது. இறைவன் இத்தகைய நன்மையைச் செய்கிறார் என்பதை மனிதன் உணர்வானேயாகில், இறைவனிடம் அவன் மேலும் எதிர்பார்க்க என்ன உள்ளது? உயிரினங்களைக் காக்க வேண்டும் என்ற கருணையால் ஏற்படும் தவிப்பு இறைவனிடம் இருப்பதால்தான், (ஸர்வத$_4$ர்மாந்பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ) 'அனைத்து புண்ணிய–பாவ கர்மங்களையும் விட்டு என்னைத் தஞ்சமடை' என்ற மிகுந்த ரகசியமான விஷயத்தைக் கூறியுள்ளார். இறைவன், உயிரினங்களைத் தம் நண்பனாகக் கருதுகிறார். *'ஸுஹ்ருதம் ஸர்வபூ$_4$தாநாம்' (கீதை 5/29)*. மேலும், தம்மை அடையும் விஷயத்தில், ஜீவனுக்குச் சுதந்திரமான உரிமையையும் அளித்துள்ளார். ''கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் – இவற்றில் ஏதாவதொன்றைச் சிக்கெனப் பற்றி, எளிதாக என்னை வந்தடையலாம். அதனால் துயரம், தாபம் – இவற்றை நிரந்தரமாக ஒழித்துவிடலாம்'' என்கிறார்.

உண்மையில் ஜீவன் கரையேறுவது, பகவானின் கருணையாலேயே. ஏனெனில் கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம், அஷ்டாங்கயோகம், லயயோகம், ஹடயோகம், ராஜயோகம், மந்திரயோகம் முதலிய எவ்வளவு வழிமுறைகள் உள்ளனவோ, அவையாவும் பகவானாலேயோ அல்லது அவரது தத்துவத்தை அறிந்த மகான்களாலேயோ பிரசாரம் செய்யப்பட்டவை.

''அசுரர்களை அழிப்பவரே! உலகில் காரணமின்றி உபகாரம் செய்யக் கூடியவர்கள் தாங்களும், தங்கள் அடியவர்களும் ஆகிய இருவரே ஆவிர்'' (ஸ்ரீராமசரிதமானசம் 7/47/3). ஆதலால், எல்லா சாதனங்களிலும் பகவானின் கருணையே நிற்கிறது. சாதனங்களைச் செய்வதில் சாதகன், ஒரு நிமித்தம் மட்டுமே. சாதனை பயனளிப்பதில் இறைவனின் கருணையே முக்கியமான காரணமாக உள்ளது.

பகவானைச் சரணடைந்தவன், இன்னும் பகவானின் தரிசனம் கிட்டவில்லையே? அவரது திருவடிகளில் எனக்கு அன்பு ஏற்படவில்லையே? எனது மனத்தின் எண்ண அலைகள் தூய்மையடையவில்லையே? என்று கவலையடையவே கூடாது. இவ்விதம் எண்ணுபவன், குரங்குக்குட்டி தன் தாயைப் பற்றுவதுபோல இறைவனைச் சரணம் புகுந்தவன். குரங்குக்குட்டி, தன் தாய் வயிற்றைக் கெட்டியாகப் பற்றியிருக்கும். தாய்க்குரங்கு குதித்தாலும் தாவினாலும் எங்கு அலைந்தாலும் குட்டி, தாயுடன் ஒட்டிக் கொண்டே இருக்கும். இதுதான் 'தன் முயற்சியால் இறைவனைப் பற்றுவது' (*மர்க்கட கிஶோர ந்யாயம்*) என்பது.

பக்தன் தனது சிந்தையையெல்லாம் பகவானிடமே விட்டுவிடுதல் வேண்டும். அவர் காட்சியளிக்கட்டும், அளிக்காமல் இருக்கட்டும்; பக்தி தரட்டும், தராமல் இருக்கட்டும்; மனத்தூய்மை அளிக்கட்டும், அளிக்காமல் இருக்கட்டும்; நம்மைத் தூய்மையாக்கட்டும், ஆக்காமல் இருக்கட்டும். இவையனைத்தையும் பகவானின் விருப்பத்திற்கே விட்டுவிடுதல் வேண்டும். இதைப் 'பூனைக்குட்டியின் தன்மையைப் பெற்றிருத்தல்' (*மார்ஜால கிஶோர ந்யாயம்*) என்பர். பூனைக்குட்டி, தன் தாயிடம் பொறுப்பை ஒப்படைத்துக் கவலையின்றியிருக்கிறது. தாய்ப்பூனை, தன் குட்டியை விரும்பிய இடத்தில் வைக்கும்; தன் விருப்பப்படிக் குட்டியை எடுத்துச் செல்லும். அப்படிச் செல்கையில் பூனைக்குட்டி கால்களைக் குவித்து வைத்துக் கொண்டு தாய் கவ்வி எடுத்துச் செல்லுமிடம் சேர்கிறது. இவ்விதமே பக்தனும் சம்சார

விஷயங்களிலிருந்து புலன்களை ஒடுக்கிக் கொண்டு, அவற்றில் ஈடுபடாமல், கர்மங்களைச் செய்ய நேரிடும்போது, 'பகவான் தமது திருவுள்ளப்படி நடத்திச் செல்கிறார்' என்ற எண்ணத்துடன், எப்போதும் பகவானை நினைத்துக் கொண்டும், நாமஜபம் செய்து கொண்டும், அவரைப் பற்றியே எண்ணம் கொண்டும் இருக்க வேண்டும். பிரபு என்ன செய்கிறாரோ, அதில் மகிழ்ச்சி கொள்ளல் வேண்டும். மனத்தை வேறு எதிலும் ஈடுபடுத்தக் கூடாது.

ஒரு குயவனார் பாண்டங்கள் செய்ய முதலில் வேண்டிய அளவு மண்ணைக் கொண்டு வருகிறார். பின் அந்த மண்ணைப் பிசைந்து, அதைத் தம் விருப்பப்படியே உருட்டுகிறார். அதைச் சக்கரத்தில் வைத்துச் சுழற்றுகிறார். அதுவும் அவர் விருப்பமே. மண் ஒருபோதும் 'நீ என்னைக் குடமாகச் செய், கோப்பையாகச் செய், குடுவையாகச் செய்' என்றெல்லாம் கூறுவதில்லை. குயவனாரின் விருப்பப்படியே அது ஆகிறது. இவ்விதமே சரணமடைந்த பக்தனும் தனது விருப்பம் என்று ஒன்றை மனத்தில் கொள்ளக் கூடாது. இத்தகைய எண்ணம் எந்த அளவுக்கு உறுதியாக இருக்கிறதோ, அந்த அளவிற்கு பகவானது கருணை தானாகவே அவன்பால் பெருகுகிறது. எவ்வளவுக்கெவ்வளவு தன்னைப் பற்றிக் கவலைப்படுகிறானோ, அந்த அளவு அவன் தானாகவே வரும் பகவத் கிருபைக்குத் தடையாக இருக்கிறான். அதாவது, சரணாகதி செய்த பிறகு பகவானிடத்திலிருந்து தடையற்ற, அளவற்ற, விசித்திரமான, மற்றவற்றிலிருந்து முழுவதும் மாறுபட்ட தனிச்சிறப்புமிக்கதான யாதொரு கருணை வருகிறதோ, அது தன் விஷயமாகக் கவலைப்படுவதால் தடைபட்டுப் போகிறது.

செம்படவன் ஒருவன் மீன் பிடிக்க ஆற்றில் வலை விரிக்கிறான். வலையில் சிக்கும் மீன்கள் அனைத்தையும் பிடித்துச் செல்கிறான். ஆனால், வலைவிரிக்கும் மீனவனின் காலருகில் இருக்கும் மீன்கள் வலையில் சிக்குவதில்லை. இவ்விதமே பகவானின் மாயையால், அகந்தை–மமதை கொண்டு ஜீவன், சம்சாரத்தில் சிக்குண்டு பிறப்பிறப்பையும் அடைகிறான்.

ஆனால், மாயாபதியான பகவானின் திருவடிகளைப் புகலாகக் கொள்பவன், மாயையைக் கடந்துவிடுகிறான். ***'மாமேவ யே ப்ரபத்₃யந்தே மாயாமேதாம் தரந்தி தே ||'* (கீதை 7/14).** மேற்கூறிய உவமையில் ஒரு பகுதி மட்டுமே ஏற்கத்தக்கது. மீனவன், மீன்களைப் பிடிக்க வேண்டுமென்ற கருத்துடன் வலை விரிக்கிறான். ஆனால், பகவானோ ஜீவகோடிகளை மாயையில் சிக்க வைப்பதற்கான கருத்துடையவர் அல்லர். ஜீவகோடிகளை மாயை எனும் வலையிலிருந்து விடுவித்துத் தம்முடன் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே பகவானது நோக்கம். ஆகவே, ***'மாமேகம் ஶரணம் வ்ரஜ'*** என்கிறார். ஜீவனோ, உலகிலுள்ள இன்பங்களில் விருப்பங்கொண்டு தானாகவே மாயையில் சிக்கிக் கொள்கிறான்.

''சுழலும் கல் இயந்திரத்தின் மத்தியில் வரும் தானியங்கள் அரைபடுகின்றன. நடுவிலுள்ள முளையருகில் உள்ளவை தப்புகின்றன'' என்ற கருத்தைக் கூறி, கபீர்தாசரும் வருந்துகிறார். ஆனால், எந்த ஆதாரத்தில் கல் இயந்திரம் சுழல்கிறதோ, அந்த முளையைப் போன்ற பகவானின் சரணத்தைப் பற்றுகிறவன், சம்சாரச் சக்கரத்தின் பாதிப்பிலிருந்து தப்புகிறான். இந்த எடுத்துக்காட்டு முழுவதையும் ஏற்க இயலாது. தானியங்கள் இயல்பாக அச்சினருகில் செல்வதுமில்லை; தப்பித்துக் கொள்ள வழி தேடுவதுமில்லை. ஆனால், பகவான் பக்தனைச் சம்சாரத்தில் விருப்பமற்றவனாகச் செய்து, அவனுக்கு தம் திருவடிகளைப் புகலாக அளிக்கிறார். ஒருவன் பகவானுடைய அம்சமாக இருந்தபோதிலும், தன்னைச் சம்சாரத்தை (உலகை)ச் சார்ந்தவனாக நினைத்தாலும், உலகப் பொருட்களில் ஏதாவது ஒன்றை விரும்பினாலும், அவன் பிறப்பிறப்புச் சுழற்சியில் சிக்கித் துக்கத்தை அனுபவிக்கிறான்.

உலகம்–பகவான் என்னும் இந்த இரண்டினுடைய தொடர்பும் இரண்டுவிதமாக அமைந்துள்ளது. உலகுடன் உண்டான தொடர்பு மனத்தின் எண்ணங்களால் மட்டும் ஏற்பட்டுள்ளது. பகவானுடன் கொண்ட தொடர்பே உண்மையானது; இயல்பானது. உலகுடன் கொள்ளும் தொடர்பு மனிதனை

அடிமையாக்குகிறது; பகவானுடன் கொள்ளும் தொடர்பு மனிதனைச் சுதந்திர புருஷனாக ஆக்குகிறது. அவனை ஞானமயமானவனாகச் செய்து, இறுதியில் பகவானுக்கே தலைவனாகவும் கூட ஆக்குகிறது!

மனிதன் கல்வி, அறிவு, பொருள், துறவு, வைராக்கியம் முதலிய ஏதாவதொரு தகுதியின் அடிப்படையில், தன்னைப் பெருமையுடையவனாகக் கருதுவானேயாகில், அவன் கல்வி, அறிவு, பொருள், துறவு, வைராக்கியம் முதலியவற்றிற்கு அடிமையாகிவிடுகிறான்.

ஒருவன் செல்வத்தின் அடிப்படையில் தன்னிடத்தில் கௌரவத்தைப் பார்ப்பானேயாகில், அந்த கௌரவம் உண்மையில் பணத்திற்காகவே கொடுக்கப்பட்டதாகிறது. உண்மையில், அவன் பணத்திற்கு அடிமை அல்லவா?

உலகிற்கு இது ஓர் இயல்பு. உலகின் பொருட்களைக் கொண்டு ஒருவன், தன்னிடத்தில் ஏதாவதொரு பெருமையைக் கொள்வானேயாகில், அவனை அந்த உலகியல் பொருட்கள் சிறுமைப்படுத்திவிடும். ஆனால், பகவானைப் புகலாகக் கொண்டு, எப்போதும் தம்மை பகவானின் அடைக்கலப் பொருளாகவே கருதுபவருக்குத் தம்மிடம் தனியே ஏதும் சிறப்புள்ளதாகத் தோன்றுவதில்லை. உலகியலைக் கடந்த, அதிசய, அற்புத இறைத்தன்மையே தெரிகிறது. தவிர பகவான், அவரைத் தமது தலையில் சூடும் மணியாகக் கருதுகிறார். (*த்வமஸி மம ப$_4$வஜலதி$_4$ ரத்நம் – கீ$_3$தகோ$_3$விந்த$_3$ம்*). அவரை தமது யஜமானராகக் கருதுகிறார்.

இந்நிலையிலும் அந்த பக்தன் தன்னிடத்தில் எவ்விதப் பெருமையும் இருப்பதாகக் கருதுவதில்லை. தன்னிடமுள்ள பக்தி முதலியவற்றால் கர்வம் கொள்ளாமல் இருக்கும் பக்தனிடம் பகவான், தமது தனிச்சிறப்பையும் பெருமையையும் தாராளமாக வெளியிடுகிறார். எப்போதாவது யாரோ ஒருவருக்கே, பகவானது இத்தகைய தனிச்சிறப்பு வாய்ந்த மகிமையை அடைய முடிந்துள்ளது. அந்த பக்தனுடைய உடல், புலன்கள், மனம்,

புத்தி முதலிய உடலைச் சேர்ந்தவைகள் கூடச் சின்மயமாக ஆகின்றன. அதனுடைய ஜடத்தன்மை முற்றிலும் நீங்கி விடுகிறது. இத்தகைய பிரேமை மிகுந்த பக்தன் பகவானுடனேயே இரண்டறக் கலக்கிறான். முடிவில் அவனது உடல்கூடக் கிடைப்பதில்லை. அவ்விதமே அன்னை மீரா உடலுடனேயே பகவானின் திருமேனியில் கலந்துவிட்டார். அடையாளம் கண்டுகொள்வதற்காக, அவரது புடவையின் ஒரு பாகம் ஸ்ரீகிருஷ்ண விக்கிரகத்தின் முகத்தில் படிந்திருந்தது. ஸ்ரீஆண்டாள் அரங்கனுடன் ஐக்கியமானதும் அனைவருமறிந்ததே. இவ்விதமே துகாராம் சுவாமியும் உடலுடனேயே வைகுண்டம் அடைந்தார்.

ஞானமார்க்கத்தில் சரீரம் சின்மயமாக ஆவதில்லை. ஏனெனில், ஞானி 'அஸத்'தினுடைய தொடர்பை அறுத்து, அஸத்திலிருந்து தன்னைப் பிரித்துச் சின்மய தத்துவத்தில் நிறுத்துகிறான். ஆனால் பக்தன், பகவானது திருமுன்னிலையில் நிற்கும்போது, அவனுடைய உடல், புலன்கள், மனம், உயிர் முதலிய அனைத்தும் அவரைக் குறித்தே அமைகின்றன. அதாவது, பக்தனது பார்வை சின்மயமான தத்துவத்தில் மட்டுமே நிலைத்திருக்கும்போது, அத்தகைய சின்மயத் தன்மையானது அந்த பக்தனுடைய உடல், புலன்கள் – இவற்றினுள்ளும் கலந்துவிடுகிறது. அதன் காரணமாக, அவனது உடல் முதலியவையும் சின்மயமாக மாறிவிடுகின்றன. வெளிப்பார்வைக்கு அந்த பக்தனது உடல் ஜடத்தன்மை உடையதாகத் தோன்றிய போதிலும், உண்மையில் அவனது உடல் சின்மயமாகவே ஆகிவிடுகிறது.

பகவானை முழுமையாகச் சரண் புகுந்த பிறகு சரணாகதன் விஷயத்தில், இறைவனது கருணை மிகச்சிறப்பாக வெளியாகிறது. உலகனைத்தையும் அன்புடன் காக்கின்றவளும், பகவானை விட்டுக் கணநேரமும் அகலாதவளுமான லக்ஷ்மிதேவிக்கு, பகவானைச் சரணடைந்தவன் விஷயத்தில் எத்தகைய அன்பும் கருணையும் உள்ளன என்பதை எவராலும் வர்ணிக்க இயலாது. உலகியலிலும்கூட பதிவிரதையான

பெண்ணுக்கு 'பித்ரு பக்தி' நிறைந்த தன் மகனிடம் நிறைந்த அன்பிருப்பதைக் காண்கிறோம்.

இரண்டாவதாக, பிரேமையுடன் கூடிய பகவான், தம் பக்தனைக் காண, கருடன், தன் இறக்கைகளிலிருந்து ஸாமவேத மந்திரங்களை இசையெழுப்ப அதன் மேலேறி, லக்ஷ்மிதேவியும் பகவானுடன் சேர்ந்து வருகிறாள். ஆனால், சிலர் பகவானை விரும்பாமல் தாயாரை மட்டும் விரும்புவர். (அதாவது லக்ஷ்மிதேவி யாருக்கும் தனித்து அருளுவதில்லை. பகவானுடன் சேர்ந்தே அருள் செய்கிறாள்.) அப்போது ஜகன்மாதாவின் வாகனம், பகலில் கண் தெரியாத ஆந்தை போலாகிவிடுகிறது. இத்தகைய வாகனத்தையுடைய லக்ஷ்மியை அடைந்த மனிதன், மதத்தால் குருடனாகிறான். அன்னையைத் தனியாக (பகவானைப் பிரித்து) எவன் விரும்புகிறானோ, அவனுக்கு மிகப்பெரிய வீழ்ச்சியே ஏற்படுகிறது. ஏனெனில் அவன், அன்னையைக் கெட்ட நோக்கத்துடன், கோணல் பார்வையுடன் பார்க்கிறான். ஆகையினால், அவன் மிகவும் தாழ்ந்தவனாவான்.

மேலும், பக்தனுக்கு பகவானிடம் மட்டும் பக்தி ஏற்படுமிடத்தில், பகவானைப் பிரியாமல் விளங்கும் லக்ஷ்மிதேவி பகவானுடனேயே வருகிறாள். ஆனால், (பக்தன்) லக்ஷ்மிதேவியை மட்டுமே விரும்பப்படுமிடத்தில், தேவியுடன் பகவான் வரவேண்டுமென்ற நியமம் இல்லை.

சரணாகதி விஷயத்தில் ஒரு கதை கூறப்படுகிறது. ஸ்ரீராமர், சீதாதேவி, அனுமன் ஆகிய மூவரும் காட்டில் ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்தனர். அந்த மரத்தின் கிளைகளில் ஒரு கொடி படர்ந்திருந்தது. கொடியின் மெல்லிய கிளைகள் பரவியிருந்தன. அக்கிளைகளில் ஓரிடத்தில் புத்தம்புதிய தளிர்கள் துளிர்த்திருந்தன. சில இடங்களில் சிவந்த தளிர்கள் காணப்பட்டன. மலர்–கனிகளால் நிரம்பியிருந்த கொடி, நிழல் தருவதாய் இருந்தது. இதனால் மரமும் அழகியதாக அமைந்தது. இந்த மரத்தின் சோபையைப் பார்த்து மகிழ்ந்த இராமபிரான், "அனுமான்! இந்தக் கொடி எவ்வளவு அழகாக இருக்கிறது! மரத்தின் நாற்புறமும் எப்படிப் படர்ந்துள்ளது!

இந்தக் கொடியின் பருத்த பழங்கள், மணமிகுந்த மலர்கள், பசுமையான இலைகள், இவை இந்த மரத்திற்கு எவ்வளவு அழகைத் தருகின்றன! இந்தக் காட்டிலுள்ள மற்ற மரங்களைவிட இது எவ்வளவு அழகாக உள்ளது! இது மட்டுமன்று. இந்த மரத்தின் வனப்பால்தான் காடே அழகாக உள்ளது. இந்தக் கொடியின் காரணமாகவே பறவைகளும் விலங்குகளும் இந்த மரத்தை அண்டியிருக்கின்றன. இந்தக் கொடி மிகவும் உயர்ந்தது!'' என்று அனுமானிடம் கூறினார்.

இராமபிரான் வாயிலாகக் கொடியின் புகழ்ச்சியைக் கேட்ட சீதாதேவி, ''குழந்தாய் அனுமான்! பார்! உனக்குப் புரியவில்லையா? இந்தக் கொடி படர்ந்திருப்பது, பழம்–இலைகள் நிறைந்திருப்பது, கிளைகள் ஓடியிருப்பது – இவையாவும் மரத்தை அண்டியே இருக்கின்றன. இந்தக் கொடியின் இத்தகைய அழகிற்கு மரமேதான் காரணம். மரமே இதற்கு ஆதாரம். மரத்தின் உதவி இல்லாமல் கொடி தானே என்ன செய்ய முடியும்? எப்படிப் படர முடியும்? இப்போது கூறு. மரத்திற்குத் தானே முழுப் பெருமையும்'' என்று அனுமானிடம் கூறினாள்.

பிரபு கூறுகிறார்— ''அனுமான்! இது கொடியின் பெருமையே அல்லவா?''

அனுமான் கூறினார்— ''எனக்கோவெனில் இவ்விரண்டையும் தவிர மூன்றாவது ஒன்று தோன்றுகிறது.'' ''அஃது என்ன?'' என்று சீதை கேட்டாள். அனுமான் பதிலுரைத்தார்— ''அம்மா! மரம், கொடி – இவ்விரண்டினுடைய நிழல் மிகவும் சுகமாக இருக்கிறது. ஆகவே, எனக்கு இவ்விரண்டினுடைய நிழலிலும் இருப்பதே சுகமாகவும் நிறைவாகவும் இருக்கிறது. அதாவது, தங்களிருவருடைய திருவடி நிழலில் வசிப்பதே, எனக்கு மிகவும் சுகமாகவிருக்கிறது.''

''பணியாளன் யஜமானனையும், குழந்தை தாயையும் சார்ந்திருப்பது போல் பக்தனும் கவலையற்று வாழ்கிறான். பக்தனைப் பேணுவது பகவானின் பொறுப்பன்றோ!'' என்று ஸ்ரீராமசரிதமானசமும் கூறுகிறது.

இவ்விதமே, பகவானும் அவரது ஆஹ்லாதினீ சக்தியும் (லக்ஷ்மிதேவியும்), ஒருவர் மற்றவருக்குப் பெருமை சேர்க்கிறார்கள். ஆனால், சிலர் இவ்விரண்டையுமே சிறந்ததாகக் கருதுகின்றனர். மற்றும் சிலர், பகவானை மட்டுமே சிறந்தவராகக் கருதுகின்றனர். மேலும் சிலர், அவரது ஆஹ்லாதினீ சக்தியை மட்டுமே சிறந்ததாகக் கூறுகின்றனர். சரணாகத பக்தனுக்கோ, பகவான் மற்றும் அவரது ஆஹ்லாதினீ சக்தியாகிய தேவி ஆகிய இருவருமே இன்றியமையாதவர்கள்.

ஒரு சமயம் கண் தெரியாத ஒரு ஸாது, கையில் ஒரு கோலைப் பற்றிக் கொண்டு யமுனை நதிக்கரையின் வழியே சென்று கொண்டிருந்தார். நதியில் வெள்ளம் பெருகிக் கொண்டு இருந்தது. ஓர் இடத்தில் யமுனைக்கரை வெள்ளத்தில் மூழ்கியிருந்தது. அங்கு ஸாதுவும் நீரில் மூழ்கிவிட்டார். கையிலிருந்த கோலும் அடித்துச் செல்லப்பட்டது. கண் தெரியாததால் நீந்தவும் முடியவில்லை. பின்னர், இறைவனைச் சரணடைய வேண்டுமென்ற எண்ணம் வரவே, உடலைக் காக்கும் எண்ணத்தை விட்டு, முயற்சி ஏதும் இல்லாமல் உடலை வெறுமனே தளர்த்தினார். கணநேரத்தில் பகவானைச் சரணமடைந்துவிட்டார். அந்த சமயம் யாரோ ஒருவர் கையைப் பிடித்துக் கரையேற்றிவிட்டார். அங்கு அவருக்கு மற்றொரு கோலும் கிடைத்தது. அதன் துணையுடன் அவர் நடக்கத் துவங்கினார். இதன் கருத்தாவது— பகவானைச் சரணடைந்து, தன்னைப் பற்றிய கவலை நீங்கியவனாக இருப்பவனுக்குத் தன் பொருட்டு செய்து கொள்ள வேண்டியது ஏதுமில்லை. பகவான் தன்னை எப்படி வைத்தாலும் அதில் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும்.

ஒரு காட்டில் ஓர் ஆட்டுமந்தை மேய்ந்து கொண்டிருந்தது. அதில் ஆடு ஒன்று ஒரு கொடியில் சிக்கிக் கொண்டது. அதிலிருந்து வெளியேற அதற்கு வெகுநேரமாயிற்று. அதற்குள் மற்ற ஆடுகளெல்லாம் தங்கள் இடத்தை அடைந்துவிட்டன. இருள் சூழ்ந்துவிட்டது. மந்தையிலிருந்து பிரிந்த அந்த ஆடு சுற்றிச் சுற்றி ஒரு குளக்கரையை அடைந்தது. அந்தக் கரையில்

ஈரமான மண்ணில் சிங்கத்தின் காலடிச்சுவடு தென்பட்டது. அந்த ஆடு சிங்கத்தின் அந்தக் காலடிச்சுவட்டையே புகலாகக் கொண்டு, அதனருகில் அமர்ந்துவிட்டது. இரவில் வனவிலங்குகளான நரி, ஓநாய், புலி முதலியன ஆட்டைப் புசிக்க அருகில் வந்தன. அப்போது ஆடு, "நீங்கள் முதலில் நான் யாருடைய காலடிச் சுவட்டின் அருகில் இருக்கிறேன் என்பதைக் கவனிக்க வேண்டும். பிறகு, என்னைச் சாப்பிடலாம்" என்று கூறியது. அந்த விலங்குகள் சிங்கத்தின் அடிச்சுவட்டைப் பார்த்துவிட்டு, இது சிங்கத்தின் காலடியல்லவோ! விரைந்து ஓடவேண்டும். சிங்கம் வந்துவிட்டால் நம்மையே கொன்றுவிடுமே! இவ்வாறு கூறிக் கொண்டு பயந்து ஓடின. முடிவில் அந்த அடிச்சுவட்டிற்கு உரிய சிங்கம் வந்தது. ஆட்டைப் பார்த்து, "நீ எவ்வாறு இந்தக் காட்டில் தனியாக இருக்கிறாய்?" என்றது. ஆடு கூறிற்று— "இந்த அடிச்சுவட்டைப் பார்க்க வேண்டும். பிறகு கேளுங்கள். இது யாருடைய அடிச்சுவடோ, அவரையே நான் சார்ந்திருக்கிறேன்." சிங்கம் பார்த்தது. 'ஆகா! இது எனது அடிச்சுவடல்லவா! இது என்னையல்லவா புகலடைந்துள்ளது' என்று நினைத்தது. சிங்கம், ஆட்டைச் சமாதானம் செய்து, "இனி நீ பயப்பட வேண்டாம், பயமற்று இருக்கலாம்" என்றது.

இரவில் நீர் அருந்த அக்குளத்திற்கு யானை ஒன்று வந்தது. அந்தச் சிங்கம் யானையைப் பார்த்து, "நீ இந்த ஆட்டை உன் முதுகில் அமர்த்திக் கொண்டு காட்டில் சுற்றி வர வேண்டும். இவ்விதம் செய்யாவிடில் கொன்றுவிடுவேன். நான் யார் என்று தெரியும் அல்லவா!" என்றது. இதைக் கேட்டு யானை நடுங்கியது. ஆட்டைத் தனது துதிக்கையால் முதுகில் ஏற்றிக் கொண்டு காட்டைச் சுற்றியது. ஆடு பயமின்றி யானையின் முதுகில் அமர்ந்து கொண்டு, மரத்தில் இருக்கும் தளிர்களைச் சாப்பிட்டுக் கொண்டு பயமற்று மகிழ்ச்சியுடன் இருந்தது.

இவ்வாறு ஜீவன், பகவானைச் சரணடைந்த கணத்திலிருந்து, அவருடைய திருவடிகளின் துணைகொண்டு அனைத்துப் பிராணிகளிடமிருந்தும் ஏற்படும் இன்னல்களில்

இருந்து விடுபட்டவனாக ஆகிறான். யாரும் அவனை அச்சுறுத்த முடியாது.

இறைவனிடம் காமம், பயம், துவேஷம், கோபம், நட்பு – இவற்றால் தொடர்பு கொண்டாலும்கூட, ஜீவன் மங்களத்தை அடைய முடியும்.†

பகவானுடன் எவ்விதத் தொடர்புமற்றவன் கரையேற வழியின்றித் தன்னை வஞ்சித்துக் கொண்டவனாகிறான்.

---

† இதைப் பின்வரும் சுலோகங்களில் கூறுகிறார்—

காமாத்$_3$ த்$_3$வேஷாத்$_3$ப$_4$யாத்ஸ்நேஹாத்$_3$யத$_2$ா ப$_4$க்த்யேஶ்வரே மந: ।
ஆவேஶ்ய தத$_3$க$_4$ம் ஹித்வா ப$_3$ஹவஸ்தத்$_3$க$_3$திம் க$_3$தா: ॥
கே$_3$ாப்ய: காமாத்$_3$ப$_4$யாத்கம்ஸோ த்$_3$வேஷாச்சைத்$_3$யாத$_3$யோ ந்ருபா: ।
ஸம்ப$_3$ந்த$_4$ாத்$_3$ வ்ருஷ்ணய: ஸ்நேஹாத்$_3$ யூயம் ப$_4$க்த்யா வயம் விபே$_4$ா ॥

(ஸ்ரீமத் பாகவதம் 7/1/29,30)

"ஒருவர் இருவரல்ல, பல்லாயிரவர் பகவானிடம் கொண்ட காதலால், பகைமையால், பயத்தால், நட்பால் தங்கள் மனத்தை பகவானிடமே ஈடுபடுத்தித் தங்கள் பாவமூட்டைகளை எரித்துச் சாம்பலாக்கி அல்லது கழுவித் தூய்மையாக்கி, ஒரு பக்தன் தன் உறுதியான பக்தியால் இறைவனை அடைவதுபோல (எளிதாக) அடைந்துள்ளனர். இதில் கோபியர்கள் பகவானிடம் கொண்ட காதலால், கம்ஸன் பயத்தினால், சிசுபாலன், தந்தவக்த்ரன் முதலிய மன்னர்கள் பகைமையால், விருஷ்ணி வம்சத்து யாதவர்கள் உறவுமுறையால், பாண்டவர்களான நீங்கள் நட்புரிமையால், பக்தியால் (நாரதர் முதலிய) நாங்களும் பகவானிடம் மனத்தை ஈடுபடுத்தியவர்கள்."

காமம் முதலிய இழிவான குணங்களும் பகவானுடன் சேர்ந்தவுடன் நம்மைக் கரையேற்றும் உபாயமாக மாறுகின்றன.

பகவானைச் சரணாகதி பண்ணுவதற்குக் கற்றறிந்தவர்களாகத்தான் இருக்கவேண்டும் என்பதில்லை. மனம் பகவானிடத்தில் ஈடுபட்டால் போதும்.

தே நாதீ$_4$தஶ்ருதிக$_3$ணா நோபாஸிதமஹத்தமா: ।
அவ்ரதாதப்ததபஸ: ஸத்ஸங்க$_3$ாந்மாமுபாக$_3$தா: ॥

(ஸ்ரீமத் பாகவதம் 11/12/7)

பகவானையே கதியாகக் கொண்ட பக்தர்களைப் பற்றி நாரதர் கூறுகிறார்—

நாஸ்தி தேஷு ஜாதிவித்$_3$யாரூபகுலத$_4$நக்ரியாதி$_3$பே$_4$த$_3$: ।

(நாரத$_3$ ப$_4$க்தி ஸூத்ரம் 72)

'உயர்ந்த பக்தர்களிடத்தில் ஜாதி, கல்வி, தோற்றம், குலம், செல்வம், தொழில் – இவற்றால் ஏற்படும் வேற்றுமைகள் கிடையா.'

எல்லாவிதத்திலும் பகவானையே சரணடைந்து, பகவானையே அனைத்துமாகக் கருதி, அவருடன் ஒன்றி, நாராயண பராயணனாக, அநன்ய பக்தராக இருப்பவரிடத்தில், வெளியே காணப்படும் பரு உடல் (ஸ்தூல சரீரம்), அதற்கு ஆதாரமான நுண்ணுடல் (சூட்சும சரீரம்), அதற்கும் காரணமான அஞ்ஞானத்தைக் காரணமாகக் கொண்ட காரண சரீரம், இவற்றின் அடிப்படையில் தோன்றும் ஜாதி, அறிவு, கல்வி – இவை காரணமாக ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள் ஒட்டா, சம்பந்தப்படா.† காரணம் யாதெனில், அத்தகைய பக்தர்கள் அச்சுதனான பகவானையே சேர்ந்தவர்கள்.

பகவான் சொல்கிறார்— சுக்ரீவன், அனுமான், ஜாம்பவான், கஜேந்திரன், ஜடாயு, குகன், கூனி (தம் தோழர்களுடன் வடமதுரை வீதிகளில் உலவிய கண்ணபிரானுக்குச் சந்தனம் பூசித் தொண்டு புரியும் பெரும்பேறு பெற்றவள்), கோபிகள் ஆகியோர் வேதம் கற்றவர்களா? பெரியோர்களை உபாசித்தவர்களா? விரதம் இருந்தவர்களா? தவம் செய்தவர்களா? ஒன்றுமில்லையே – சாது சங்கம் அவர்களுக்குக் கிடைத்தது – என்னை அடைந்து விட்டார்கள்!

† *பும்ஸ்த்வே ஸ்த்ரீத்வே விஶேஷோ வா ஜாதிநாமாஶ்ரமாத$_3$ய:* ।
ந கரணம் மத்$_3$ப$_4$ஜநே ப$_4$க்திரேவ ஹி காரணம் ॥

(அத்$_4$யாத்ம ராமாயணம், அரண்ய காண்டம் 10/20)

என்னை அண்டுவதற்கு ஆண் பிள்ளையாகத்தான் இருக்க வேண்டுமென்றோ, பெண்ணாகத்தான் இருக்க வேண்டுமென்றோ, இந்த ஜாதியில் பிறந்தவனாகத்தான் இருக்க வேண்டுமென்றோ, இந்த வயதுக்காரர்களாகத்தான் இருக்க வேண்டுமென்றோ நியதி இல்லை; பக்தி இருந்தால் போதும்.

'யதஸ்ததீ$_3$யா:' என்ற பக்தி சூத்திரத்தில், நாரதர் இதைக் கூறுகிறார். அவர்கள் அச்சுதனான பகவானைச் சார்ந்தவர் களாதலால் அச்சுத கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாவர்.‡

சரணாகதியின் ரகசியம்

சரணாகதியின் ரகசியம் என்ன? இதன் முழு உண்மையை பகவானே அறிவார். ஆயினும், நமக்குத் தெரிந்த அளவு கூறவேண்டியுள்ளது. சரணாகதியைப் பற்றி விவரிக்கப் புகுபவன், தன் அறிவை வெளிக்காட்ட முற்படுகிறானேயன்றி,

---

கிம் ஜந்மநா ஸகலவர்ணஜநோத்தமேந
கிம் வித்$_3$யயா ஸகலஶாஸ்த்ரவிசாரவத்யா ।
யஸ்யாஸ்தி சேதஸி ஸத$_3$ா பரமேஶப$_4$க்தி:
கோऽந்யஸ்ததஸ்த்ரிபு$_4$வநே புருஷோऽஸ்தி த$_4$ந்ய: ॥

(ப்$_3$ர. ஸம். ப$_4$. 17)

பிறவியில், உயர்குலத்தோனாக இருந்து என்ன பயன்? சாஸ்திரங்கள் அனைத்தையும் கற்றறிந்து என்ன பயன்? எவனது உள்ளத்தில் இறை அன்பு ஒளிர்கிறதோ, அவனைப் போன்ற பேறுபெற்றவன் மூவுலகங்களிலும் இல்லை. அவனை நிகர்த்தவர்களும் மூவுலகிலும் இல்லை.

வ்யாத$_4$ஸ்யாசரணம் த்$_4$ருவஸ்ய ச வயோ வித்$_3$யா க$_3$ஜேந்த்$_3$ரஸ்ய கா
கா ஜாதிர்விது$_3$ரஸ்ய யாத$_3$வபதேருக்$_3$ரஸ்ய கிம் பௌருஷம் ।
குப்$_3$ஜாயா: கிமு நாம ரூபமதி$_4$கம் கிம் தத்ஸு$_3$தா$_3$ம்நோ த$_4$நம்
ப$_4$க்த்யா துஷ்யதி கேவலம் ந ச கு$_3$ணைர்ப$_4$க்திப்ரியோ மாத$_4$வ: ॥

வேடனுக்கு ஏது ஆசாரம்? துருவனுக்கு என்ன வயது? கஜேந்திரனுக்கு என்ன கல்வியிருந்தது? விதுரன் ஜாதி என்ன? யது குல மன்னன் உக்ரஸேனனுக்கு என்ன வீரம்? கூனிக்கு என்ன அழகு? சுதாமாவிடம் எவ்வளவு செல்வம் இருந்தது? இவர்களனைவரும் பகவானை அடைந்தனர். பகவானுக்கு பக்தியே பிரியமானது. பக்தியினால் பகவான் சந்தோஷமடைகிறார். நடைமுறை, கல்வி முதலிய குணங்களால் அல்ல.

‡ *பித்ருகே$_3$ாத்ரீ யத$_2$ா கந்யா ஸ்வாமிகே$_3$ாத்ரேண கே$_3$ாத்ரிகா ।*
ஶ்ரீராமப$_4$க்திமாத்ரேணாச்யுதகே$_3$ாத்ரேண கே$_3$ாத்ரக: ॥

(நாரத$_3$பாஞ்சராத்ரம்)

சரணாகதியின் பரிமாணத்தை விண்டு உரைக்க முடிவதில்லை. ஆதலால், 'முழு ரகசியமும் பகவானே அறிவார்' எனக் கூறப்பட்டது. இதைப் படிப்பவர்களிடம் ஒரு விண்ணப்பம்— இங்குக் கூறப்பட்டவற்றை அப்படியே எடுத்துக் கொள்ள வேண்டும். நேர்மாறான பொருள் கொள்ள வேண்டாம். ஏனெனில், பெரும்பாலும் மக்கள் ஒரு தத்துவத்தை – ரகசியத்தை – அதில் ஆழ்ந்து, சரியான கோணத்தில் பொருள் கொள்ளாமல், மேலோட்டமாகப் பொருள் கொண்டு விடுகின்றனர். ஆதலால், இத்தகைய உயரிய விஷயங்களைச் சொல்பவர், கேட்பவர் அரிதாகின்றனர்.

பகவான் கீதையில் சரணாகதியைப் பற்றி இரண்டு விஷயங்கள் கூறியுள்ளார்—

1. ***'மாமேகம் ஶரணம் வ்ரஜ'* (கீதை 18/66)** – 'வேறு ஒன்றைப் பற்ற வேண்டும் என்ற எண்ணமே வராமல் என்னைச் சரணடை.' 2. ***'ஸ ஸர்வவித்$_3$ப$_4$ஜதி மாம் ஸர்வப$_4$ாவேந ப$_4$ாரத ॥'* (கீதை 15/19)** – 'எல்லாமறிந்த அத்தகையவன் எல்லாவிதத்திலும் என்னையே வழிபடுகிறான்.' எல்லாவிதத்திலும் என்னையே வழிபடுகிறவன்தான் எல்லாம் அறிந்தவன். ***'தமேவ ஶரணம் க$_3$ச்ச$_2$ ஸர்வப$_4$ாவேந ப$_4$ாரத ।'* (கீதை 18/62)** – 'எல்லாவிதமாகவும் அவனையே சரணடை.' பகவானை எவ்விதம் சரணடைவது? பகவானை மட்டுமே சரணடைய வேண்டும். அதாவது, அவரது குணம், மகிமை முதலியவற்றைக் கவனியாமல், எவ்விதத்திலும் அவரே கதி என்று இருக்க வேண்டும். உலக விஷயமான ஆசைகளும் அற்று இருத்தல் வேண்டும்.

பகவானை மட்டும் சரணடைதல் என்பதன் உட்பொருள் யாதெனில், பகவானது அளவற்ற கல்யாண குணங்கள், பிரபாவம், தத்துவம், ரகசியம், மகிமை, லீலைகள், திருநாமம், இருப்பிடம், அவருடைய அளவற்ற ஐசுவரியம், இனிமை, அழகு ஆகிய இந்த விஷயங்களில், சரணாகத பக்தன் பார்வை செலுத்துவதில்லை. நான் பகவானை மட்டுமே சேர்ந்தவன், அவரே என்னுடையவர் என்பதே சரணாகதனின் கருத்து. அந்த பக்தன் பகவானுடைய குணம், மகிமை – இவற்றைப் பார்த்து

பகவானைச் சரணடைவானேயாகில், அவன் உண்மையில் அந்த குணம், மகிமை – இவற்றையே சரணடைந்தவனாவான்; பகவானைச் சரணடையவில்லை. ஆனால், மேற்கூறிய விஷயத்தை விபரீதமாகப் பொருள் கொள்ளக்கூடாது.

விபரீதமான பொருள் கொள்வதென்பது, சரணாகதன் பகவானது குணம், பிரபாவம், திருநாமம், ஸ்தானம், இனிமை, அழகு முதலியவற்றைக் கௌரவிப்பதில்லை; அவற்றைச் சற்றும் பொருட்படுத்துவதில்லை; பகவானைப் பூஜிப்பது இல்லை; அவருடைய குணம், மகிமை, லீலைகள் – இவற்றைக் கேட்பதில்லை; அவரது உறைவிடமான ஆலயங்கள், க்ஷேத்திரங்களுக்குச் செல்வதில்லை – என்பதாகப் பொருள் கொள்வது தவறானது.

பகவானை மட்டுமே சரணடைகிறான் என்பதன் பொருள், பகவான் ஒருவரே என்னுடைய எல்லாமும். அவர் ஐசுவரியத்துடன் இருந்தாலும் நல்லது; ஐசுவரியமற்றவராயினும் நல்லதே. அவர் மிகுந்த இரக்ககுணமுள்ளவராயினும் நன்று; அவரைப் போன்ற கொடியவர் உலகிலேயே இல்லை என்றாலும் நன்றே. அவர் மிக்க மகிமை உடையவராயினும், அவரிடம் எந்த மகிமையும் இல்லை என்றாலும்கூட நன்றே. சரணாகதனிடம் இவ்விஷயங்கள் பெரிய பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. அவர் எப்படிப்பட்டவராயினும் அவரே என்னுடையவர் என்ற எண்ணமே பிரபன்னனுக்கு முதன்மையாக இருக்கும். இதையே கீழ்வரும் சுலோகங்களும் கூறுகின்றன—

அஸுந்த$_3$ர: ஸுந்த$_3$ரஶேக$_2$ரோ வா
கு$_3$ணைர்விஹீநோ கு$_3$ணிநாம் வரோ வா ।
த்$_3$வேஷீ மயி ஸ்யாத் கருணாம்பு$_3$தி$_4$ர்வா
ஶ்யாம: ஸ ஏவாத்$_3$ய க$_3$திர்மமாயம் ॥
அஶ்லிஷ்ய வா பாத$_3$ரதாம் பிநஷ்டு மாம–
த$_3$ர்ஶநாந்மர்மஹதாம் கரோது வா ।
யத$_2$ா தத$_2$ா வா வித$_3$த$_4$ாது லம்படோ
மத்ப்ராணநாத$_2$ஸ்து ஸ ஏவ நாபர: ॥

(ஶிக்ஷாஷ்டகம்)

ஐசுவரியம், கருணை, அழகு – இவை என்றுமே அவரை விட்டு நீங்காதவை. நாம் இவற்றைக் கவனிக்காவிடினும் இவை நீங்கிவிடப் போவதில்லை. தனது சரணாகதி, பகவானை மட்டுமே லட்சியமாகக் கொண்டுள்ளது என்பதற்காகவே சரணாகதன், குணம் முதலியவற்றைக் கணிசிப்பதில்லை என்று கூறப்பட்டது.

பணக்காரன் ஒருவனிடம் நாம் மிகவும் அன்பு செலுத்தினால், உண்மையில் அந்த அன்பு அவனுக்காக இல்லை. அது பணத்திற்கானதுதான். ஒரு மந்திரியை எவ்வளவு கௌரவித்தாலும், அது அவரது பதவியையே கௌரவிப்பதாகிறது. ஒரு பலசாலியை மதித்தாலும், அது அவன் பலத்தையே மதித்ததாக ஆகிறது. இவையன்றி, ஒரு மனிதனை அவனுக்காக மட்டுமே நேசித்தால், அவனிடமுள்ள பணம், பதவி முதலியன பறிபோய்விட்டன என்பதாகாதல்லவா? அவை அவர்களிடமே இருக்கின்றன. அவ்விதமே பகவானை மட்டும் சரணமடைவதால், அவரது குணம் முதலியன அவரிடமிருந்து நீங்கிவிடா. ஆனால், நம் நோக்கம் பகவானிடம் மட்டுமே இருக்க வேண்டும் என்பதே இங்கு வலியுறுத்தப்படுகிறது.

சப்தரிஷிகள் பார்வதிதேவியிடம் வந்து, சிவபெருமானை அவகுணங்கள் நிறைந்தவராயும், திருமாலை குணங்கள் நிறைந்தவராயும் வர்ணித்தபோது, சிவனை அடைய தவம் இயற்றிக் கொண்டிருந்த பார்வதிக்கு, அவரை விட்டுவிடும் எண்ணமே எழவில்லை. அவர் கூறிய பதில்—

''மகாதேவர் தீயகுணமுடையவர்; விஷ்ணு சகல நற்குணங்களும் உடையவர் என்றே இருக்கட்டும். எங்கு மனது ஈடுபட்டுவிட்டதோ, அதை மாற்ற முடியாது'' (ஸ்ரீராமசரிதமானசம் 1/80).

பகவானுடைய பிரபாவங்களைக் காண்கின்றவனுக்கும், அதன் மூலம் பகவானை பக்தி செய்பவனுக்கும் முக்தி, ஐசுவரியம் – இவை கிடைக்கும். ஆனால், பகவான் கிடைக்க மாட்டார். பகவானுடைய பெருமைகளை நோக்காமல், பகவானை மட்டுமே பார்க்கின்ற பகவத் பிரேமியான பக்தனே,

பகவானிடம் செல்கிறான். மேலும் அத்தகைய பிரேமியான பக்தன், பகவானைக் கட்டிவிடுகிறான். தம்மை விற்கவும் அவனுக்குச் சலுகை கொடுக்கிறார், பகவான். "இந்தப் பிரேமியான பக்தன் என் பெருமைகளைப் பற்றிக்கூட விசேஷமாகக் கருதாமல், என்னை, எனக்காகவே பக்தி செய்கிறான்" என்று, இவன் விஷயத்தில் பெருமதிப்பு பகவானுக்கு ஏற்படுகிறது.

பகவானுடைய அளவிடற்கரிய பெருமைகளைக் கணக்கிடும்போது நம் கண்ணோட்டம், அவர் மூலமாக நமது ஆசைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் இழிந்துவிடுகிறது. அவரது பிரபாவம் நமது விருப்பத்தை நிறைவேற்றப் பயன்படட்டுமே என்று எண்ணத் தலைப்படுகிறோம். அத்தகைய விருப்பமேதும் இல்லாவிடில், பகவானுடைய ஐசுவரியம், சக்தி – இவற்றை நாம் ஏன் பார்க்கப் போகிறோம்? பகவானை மட்டுமே விரும்பும்போது, அவரையே நாம் சரணடைகிறோம். நாம் அவருடையவராகவே ஆகிவிடுகிறோம்.

சிறிது சிந்திப்போம்— பூதனை என்ற அரக்கி நஞ்சு கலந்த முலைப்பாலைக் கண்ணனுக்கு ஊட்டினாள். அவளுக்கு பகவான் தாய்க்கு அருளும் நற்கதியை அளித்தார்.† எத்தகைய முக்தி யசோதைக்குக் கொடுக்க வேண்டுமோ, அதை

---

† *அஹோ ப₃கீ யம் ஸ்தநகாலகூடம்*
ஜிக₄ாம்ஸயாபாயயத₃ப்யஸாத்₄வீ ।
லேபே₄ க₃திம் த₄ாத்ர்யுசிதாம் ததோ௨ந்யம்
கம் வா த₃யாலும் ஶரணம் வ்ரஜேம ॥
(ஸ்ரீமத் பாகவதம் 3/2/23)

"ஆச்சரியம்! பகாசுரனின் உடன் பிறந்தாள் பூதனை. ஸ்ரீகிருஷ்ணனைக் கொல்வதற்கென்றே தனது மார்பகத்தில் கொடிய விஷத்தை வைத்துக் கொண்டு, அவருக்குப் பாலூட்டினாள். ஆனால், தீயவளான அவளும் செவிலித்தாயான யசோதை பெறவேண்டிய நற்கதியை அடைந்தாள். அவ்வாறு கருணையே வடிவான ஸ்ரீகிருஷ்ணனை விட்டுவிட்டு, வேறு யாரைத்தான் சரணம் பற்றுவது?"

பூதனைக்குக் கொடுத்துவிட்டார். விஷம் ஊட்டியவளுக்கு முக்தி கொடுத்தால், அன்போடு தினமும் பாலூட்டும் யசோதைக்கு எதைக் கொடுப்பது? ஆகவே, ஜீவகோடிகளனைவருக்கும் முக்தியை அளிக்கும் பகவான், யசோதைக்கு வசப்பட்டு விட்டார். யசோதைக்குத் தன்னையே அளித்துவிட்டார். வசமானதை நிரூபிக்கவே, கண்ணன் விஷமம் செய்யும்போது யசோதை மிரட்டினால், பயந்து அழவே ஆரம்பித்துவிடுகிறார். ஏனெனில் அன்னை, கண்ணனின் பரத்வத்தையோ, ஐசுவரியத்தையோ பொருட்படுத்தவேயில்லை. இவ்விதமே யார் பகவானிடம் முக்தி கேட்கிறார்களோ, அவர்களுக்கு முக்தி அளிக்கிறார். யார் எதையும் விரும்பவில்லையோ, அவர்களுக்குத் தம்மையே கொடுக்கிறார்!

எல்லாவிதத்திலும் பகவானையே சரணடைந்துவிட்டதற்கு உண்மையான அடையாளத்தைக் கூறுவோம். நமது உடல் நோயற்று உள்ளது. புலன்கள் சரியாக இயங்குகின்றன. மனம் தூய்மையாக உள்ளது. அறிவினால் எழுத–படிக்க அறிந்துள்ளோம்; புகழுடன் இருக்கிறோம். உலகில் நமக்கு கௌரவம் இருக்கிறது என்று எண்ணி, தன்னையும் ஒரு பொருட்டாகக் கருதி, பகவானைச் சரணடைவது சரணாகதி ஆகாது.

பகவானைச் சரணடைந்த பிறகு, நமது உடல் இப்படி இருக்கவேண்டும்; மனம், அறிவு இப்படி இருக்கவேண்டும்; தியானத்தில் மனம் ஈடுபடவேண்டும்; நம் வாழ்க்கையில் இவ்விதத் தகுதிகளெல்லாம் ஏற்படவேண்டும்; நமது நடத்தை இத்தகையதாக அமைய வேண்டும்; பகவானது கதைகளைக் கேட்கும்போது கண்களில் கண்ணீர், நாத்தழுதழுத்தல் – இத்தகைய பக்தி வரவேண்டும்; இவ்வாறெல்லாம் நம் வாழ்வில் நிகழவேண்டும். இல்லையேல் நாம் பகவானைச் சரணடைந்ததாக எவ்விதமாகும்? என்று – இவ்விதமெல்லாம் எதையும் எண்ணவே மாட்டான். அவரையே சரணடைந்தவன் எதையும் கருதவே மாட்டான். அவனுக்கு உடல் நோயற்று இருந்தாலென்ன, நோயால் வாடினாலென்ன? மனம் சஞ்சலமாக இருந்தாலென்ன, நிலை பெற்றிருந்தாலென்ன? புத்தியில் அறிவு

மிகுந்தோ, குன்றியோ எப்படி இருந்தாலென்ன? மூடனோ, அறிவாளியோ எவ்வாறு இருந்தாலென்ன? இது மாதிரி விஷயங்களைக் கனவிலும் நினைக்க மாட்டான், சரணாகதன். இவை அநன்ய சரணாகதனைப் பரீட்சிக்கும் உறைகல்லாக ஆகா. அவனது பார்வையில் இவையாவும் புல்லுக்கு நிகர். தன்னுடன் இவற்றை எடுத்துச் செல்லப் போவதில்லை. இவற்றை எண்ணுவதால் சரணாகதனுக்குத் தன் விஷயமான அகந்தைதான் வளரும். இவற்றால் 'நான் சரணாகத பக்தன், என்னிடத்தில் இத்தகைய ஆத்ம குணங்கள் உள்ளன' எனக் கர்வம் வரும். அல்லது 'நானோ பகவானைச் சரணடைந்த பக்தன். ஆனால், கீதையில் பகவான் கூறிய பக்த லட்சணங்கள்† எனக்கு அமையவில்லையே' என்ற தாபம் உண்டாகும். ஆகவே, குணங்கள் தன்னிடத்தில் அமைந்துவிட்டதாகப் பார்த்தால் கர்வமும், அக்குணங்கள் தன்னிடத்தில் இல்லை என்றால் ஏக்கத்தால் தாபமும் வருத்தமும் தோன்றுகின்றன. ஆகவே, பகவானைச் சரணடைந்த பிறகு இந்த விஷயங்களைப் பற்றி

† எவன் எல்லா உயிரினங்களிடமும் வெறுப்பு இல்லாத வனோ, தன்னலம் இல்லாமல் எல்லோரிடமும் அன்பு கொண்டவனோ, காரணமின்றி இரக்கம் காட்டுபவனோ, மமகாரமற்றவனோ, அகங்காரமற்றவனோ, இன்ப—துன்பங்கள் நேரும்போது நிலைமாறாது சமமாக இருப்பவனோ, பொறுக்கும் இயல்பை உடையவனோ அதாவது குற்றம் செய்தவனுக்கும் அபயம் அளிப்பவனோ, யோகியோ, எப்பொழுதும் எல்லாவிதங்களிலும் திருப்தி உள்ளவனோ, மனம் மற்றும் புலன்களோடு கூடிய உடலைத் தன்வசப் படுத்தியவனோ, மேலும் என் மீது திடமான நம்பிக்கை உடையவனோ, என்னிடத்தில் மனம், புத்தி — இவற்றை அர்ப்பணம் செய்தவனோ, என்னுடைய அந்த பக்தன் எனக்குப் பிரியமானவன். எவனிடமிருந்து எந்த ஜீவனும் பாதிப்பு அடைவது இல்லையோ, எவன் எந்த ஜீவன் மூலமும் பாதிப்படைய மாட்டானோ, மேலும் எவனொருவன் மகிழ்ச்சி, பொறாமை, பயம், பாதிப்பு முதலியவற்றிலிருந்து விடுபட்டவனோ, அந்த பக்தன் எனக்குப் பிரியமானவன். எந்த மனிதன், எதையும் எதிர்பார்க்காதவனோ, அகத் தூய்மையும் புறத்தூய்மையும் உள்ளவனோ, பிறவிப்பயனை அறிந்தவனோ, பட்சபாதமற்றவனோ, துக்கங்களிலிருந்து விடுதலை பெற்றவனோ, செயல்களனைத்திலும் 'நான் செய்கிறேன்' என்னும்

மறந்தும்கூட நினைக்காமலிருப்பதே நல்லது. இதற்குத் தலைகீழாகப் பொருள் கொள்ளக் கூடாது. அதாவது நற்குணங்களே இல்லாமல் துவேஷம், விரோதம் – இவற்றைச் செய்யலாம்; கர்வம் கொள்ளலாம்; எதை வேண்டுமானாலும் செய்யலாம் – என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. குண விஷயமான வருத்தம் கொள்ள வேண்டாம் என்பதே கருத்து. பகவானைச் சரணடைந்துவிட்டால் இந்த (பக்த லட்சணமான) குணங்கள் அனைத்தும் தாமாகவே வந்துவிடும். ஆனால், இவை வருகின்றனவோ, வராமலேயே போய்விடுமா? என்பதைப் பற்றிச் சரணாகத பக்தன் சிந்திக்க மாட்டான். தன்னிடத்தில் பக்த லட்சணங்களான குணங்கள் உள்ளனவா, இல்லையா? என பரீட்சிக்காமலிருப்பதே நல்லது.

உண்மையான சரணாகத பக்தன் பகவானுடைய குணங்கள் பற்றியோ, தன்னுடைய குணங்கள் பற்றியோ கவனம் செலுத்துவதில்லை. பகவானைப் பக்தி செய்யும் உயரிய அடியார்கள் எப்படி இருக்கிறார்கள், எத்தகைய ஞானமடைந்துள்ளார்கள் என்பனவெல்லாம்கூட, அவனது நினைவில் இரா.

பெரும்பாலும் உலக மக்கள் பக்தனது பக்தியைப் பலவிதமாகப் பரீட்சிப்பார்கள். இவன் பகவானைப் பக்தி செய்தும் இவனுக்கு ஏன் நோய் ஏற்பட்டுள்ளது? பக்தனாயிருந்தும்

அபிமானத்தை நீக்கியவனோ, அந்த என் பக்தன் எனக்குப் பிரியமானவன். எவன் ஒருபோதும் மகிழ்வதில்லையோ, வெறுப்பது இல்லையோ, துயரப்படுவதில்லையோ, எதற்கும் ஆசைப்படுவது இல்லையோ, எவனொருவன் நல்லதும் தீயதுமான செயல்கள் அனைத்தையும் துறந்தவனோ, அந்த என்னிடம் பக்தியுள்ளவன் எனக்குப் பிரியமானவன். எவன் பகைவனிடமும் நண்பனிடமும், மதிப்பிலும் அவமதிப்பிலும் சமபுத்தி உடையவனோ, அவ்விதமே தட்ப–வெப்பம், சுக–துக்கங்களாகிற இரட்டைகளில் சமபுத்தி உடையவனோ, மேலும் பற்றற்றவனோ— இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் சமமாக மதிப்பவனோ, பகவானை எப்பொழுதும் சிந்தித்திருப்பவனோ, மேலும் எந்தவிதத்தில் உடலைப் பேணுதல் நடைபெற்றாலும் மகிழ்ச்சி கொள்பவனோ, வசிக்கும் இடத்தில் தனது என்ற பற்றற்றவனோ, நிலைத்த புத்தியுடையவனோ, பக்தியுள்ள அந்த மனிதன் எனக்குப் பிரியமானவன் (ஸ்ரீமத் பகவத்கீதை 12/13–19).

இவனுக்கு ஏன் துக்கம் வந்துள்ளது? அவனது மகன் ஏன் மரித்தான்? அவன் பணத்தை ஏன் இழந்தான்? உலகில் அவனுக்கு ஏன் அவமரியாதை ஏற்பட்டது? அவன் மதிப்பு இல்லாமல் போனது ஏன்? இத்தகைய விஷயங்களைக் கொண்டு சோதித்துப் பார்ப்பது விலங்குத் தன்மையாகத் தோன்றுகிறது. மனிதர்களுக்கு ஏன் இவ்வாறு தோன்றுகிறது? என்பதற்கு ஒரு காரணம் உண்டு. அவர்கள் சத்சங்கம் என்பதை அறியாததே இதற்குக் காரணம். ஆகவே, அவர்களுக்கு பக்தி – சரணாகதி – என்றால் என்ன என்ற விஷயமே தெரியாமல் உள்ளது. இவ்வாறு கூறுவதற்குப் பொருள், இறைவனின் அடியவன் ஏழையாகவே இருப்பான்; உலகில் அவனுக்கு அவமானமே எஞ்சும்; இகழ்ச்சிதான் கிட்டுகிறது – என்றெல்லாம் ஆகாது. வாழ்க்கையில் படும் துயரங்களைப் பற்றி அவன் ஏதும் கணிசிப்பதே இல்லை. அவன் தன்னையும் பகவானையும் மட்டுமே காண்கிறான். இவ்வுலகிலோ, மூவுலகிலுமோ எது இருந்தாலும், இல்லாவிடினும், அவனுக்கு அது பற்றி அக்கறை இல்லை. பகவானது படைத்தல்–காத்தல்–அழித்தல் என்ற பிரபுத்வம் பற்றிகூட, அவன் ஆர்வம் கொள்வதில்லை.

ஒருவர் ஒரு சாதுவைப் பார்த்து, "தாங்கள், எந்த பகவான் உலகைப் படைத்து–காத்து–அழிக்கிறாரோ, அவருடைய பக்தர்தானே" எனக் கேட்டார். அப்போது அந்த சாது கூறிய பதில்— "எனது பகவானுக்குப் படைப்பு முதலியவற்றுடன் எந்தத் தொடர்பும் இல்லை. இது அவருடைய பல பெருமைகளில் ஒன்று. இது அவருக்கு ஒரு பெரிய விஷயமும் அன்று." ஆகவே, முன்கூறியது போல் சரணாகத பக்தன், பகவானுடைய மகிமை–பெருமைகளில் விசேஷமாக ஈடுபட வேண்டியது இல்லை.

ரிஷிகேசத்தில் கங்கைக் கரையில் மாலை நேரத்தில் ஒரு சத்சங்கம் நடந்து கொண்டிருந்தது. கோடை காலம். கங்கையின் குளிர்காற்றும் வீசிக் கொண்டிருந்தது. அப்போது ஒரு பக்தர்— "எவ்வளவு குளிர்ந்த காற்று வீசுகிறது!" என்று அருகிலிருந்தவரிடம் கூறினார். "காற்றை அனுபவிக்க இங்கு அவகாசம் எப்படி உங்களுக்குக் கிடைத்தது? உஷ்ணக்காற்று, குளிர்ந்த காற்று என்ற இவற்றில் உங்களுக்கு எப்படிக் கவனம் செல்கிறது? பகவானைப்

பூஜிப்பதில் கவனம் செலுத்தினால் காற்றைப் பற்றியோ, மற்றவை பற்றியோ கவனிக்க முடியாதே'' என்றார் மற்றவர்.

இது தொடர்பான கதை ஒன்று உண்டு. கதை சிறிதே தரம் தாழ்ந்ததாகத் தோன்றினாலும், கருத்து உயர்ந்தது. ஒரு வேசி இருந்தாள். அவளுக்கு ஆடவனொருவனுடன் தொடர்பு இருந்தது. குறித்த நேரத்தில் அவள் அந்த ஆண்மகனைச் சந்திக்கச் சென்று கொண்டிருந்தாள். வழியில் ஒரு பள்ளிவாசல் இருந்தது. அதன் சுவர் குட்டையாக இருந்தது. அதனருகில் அங்குள்ள மௌல்வி நமாஸ் செய்து கொண்டிருந்தார். அந்த வழியே அவ்வேசி செல்லும்போது, வணங்கிக் கொண்டிருக்கும் மௌல்வியை இடறிவிட்டாள். அவருக்கு மிகவும் கோபம் வந்தது. ''செருப்புக் காலை என் மீது வைத்து என்னை அசுத்தம் செய்துவிட்டாள். எத்தகைய பெண் இவள்!'' எனக் கூறிவிட்டு, அவளை எதிர்பார்த்துக் கொண்டு, அங்கேயே உட்கார்ந்திருந்தார், மௌல்வி. அந்த வேசி திரும்பி வரும்போது, அவளைக் கடிந்து கொண்டார். ''நான் இறைவனைத் தொழுது கொண்டு, நமாஸ் செய்து கொண்டிருந்தேன். நீ என் மேல் செருப்புக் காலை வைத்துச் சென்றாய்'' என்றார். அதற்கு அந்தப் பெண் கூறினாள்—

''ஒரு மனிதனிடத்தில் மனம் வைத்திருந்த காரணத்தால் எனக்கு எதிரில் இருந்த சுவர், மனிதர் எதுவும் தெரியவில்லை. ஆனால் நீரோ, கடவுளின் தியானத்தில் இருந்தீர். அப்போது உமக்கு என்னை எவ்விதம் அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது? நீர் குரான் படிப்பதாகப் பாசாங்கு செய்து கொண்டிருந்தீர். ஆண்டவனைத் தியானம் செய்து கொண்டிருப்பின், என்னை எவ்விதம் அடையாளம் கண்டுகொள்ள முடியும்? யார் வந்தார்? எப்படி வந்தார்? மனிதனா? விலங்கா? பறவையா? எது? யார் மேலே வந்தார்? யார் கீழே போனார்? யார் காலை வைத்தார்? – இது போன்ற விஷயத்தில் எவ்விதம் உமது சிந்தனை சென்றது? இறைவனை விடுத்து வேறு விஷயத்தில் கவனம் எப்படிச் செல்லும்?'' மற்ற விஷயங்களில் கவனம் செலுத்தும் ஒருவன், இறைவனைச் சரணடைந்ததாக எப்படிக் கருத முடியும்?

கௌரவ–பாண்டவர்கள் சிறுவர்களாக இருந்தபோது, அவர்கள் அஸ்திர–சஸ்திரங்களைப் பயின்றனர். அரங்கேற்றம் செய்யும் தருணத்தில் அவர்களுக்குப் பரீட்சை வைக்கப்பட்டது. ஒரு மரத்தின் மீது பறவை பொம்மை ஒன்று வைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொருவராகப் பறவையின் கழுத்தைக் குறி பார்த்து, அம்பு எய்ய வேண்டுமென ஏற்பாடு. ஒவ்வொருவராக அழைக்கப் பட்டனர். குரு முதலில் ஒவ்வொருவரையும் தனித்தனியே கேட்டார். 'உனக்கு அங்கே என்ன தெரிகின்றது?' என்பதே கேள்வி. ஒருவன் மரம் தெரிகின்றதாகவும், மற்றொருவன் கிளைகள் தெரிவதாயும், மற்றவன் பறவை தெரிவதாகவும், அதன் மூக்கு கூடத் தெரிவதாயும், வேறொருவன் அதன் சிறகுகளும் தெரிவதாகவும் கூறினர். இப்படிக் கூறியவர்களைத் திருப்பி அனுப்பிவிட்டார். அர்ஜுனனின் முறை வந்தது. அவரிடமும், 'உனக்கு என்ன தெரிகிறது?' எனக் கேட்டார். அர்ஜுனன், 'எனக்குப் பறவையின் கழுத்து மட்டுமே தெரிகிறது. வேறு எதுவும் தெரியவில்லை' எனக் கூறினார். அம்பை எய்யும்படிக் கூறினார், குரு. அர்ஜுனன் ஒரே அம்பினால் பறவையின் கழுத்தைக் கொய்து வீழ்த்தினார்.

இலக்கை அறிந்தபின், அதிலேயே பார்வை நிலைபெற வேண்டும். மற்றவை தெரியவே கூடாது. எதுவரை இலக்கு ஒன்றாகவும், அதிலேயே நிலைபெற்றிருத்தலும் இல்லையோ, அதுவரை அநன்ய பக்தி, அநன்ய சரணாகதி என்பது எப்படி ஏற்படும்? கீதையிலும் இதை பகவான், ***'மயி சாநந்யயோகே₃ந ப₄க்திரவ்யபி₄சாரிணீ ।' (கீதை 13/10)*** என்கிறார். பகவானைத் தவிர உடல், மனம், புத்தி, நான் எனும் எண்ணம் முதலிய அனைத்தையும் துறப்பதே அநன்ய யோகம் (எதனுடைய தொடர்பும் அற்றிருப்பது) ஆகும்.† பகவான் மட்டுமே அங்கு எழுந்தருள வேண்டும்.

---

† ***'மற்றிருந்தீர்கட்கு அறியலாகா மாதவன் என்பதோர் அன்பு'*** என்று அநன்ய யோகத்தைப் பற்றி, ஆண்டாள் மிகத் தெளிவாக அருளிச் செய்துள்ளார், நாச்சியார் திருமொழியில்.

ஒரு பக்தர் கோசுவாமி துளசிதாசரிடம் கூறினார்— "நீங்கள் பக்தி செய்யும் ஸ்ரீராமர் 12 கலைகள் நிறைந்தவர், ஸ்ரீகிருஷ்ணனோவெனில் 16 கலைகள் நிறைந்தவர்" என்று. இதைக் கேட்டதும் கோசுவாமி, அப்படிக் கூறியவரது திருவடியில் வீழ்ந்து கூறினார்— "ஆகா! தாங்கள் எத்தகைய பெரிய கிருபை செய்துவிட்டீர்! நான் ஸ்ரீராமரை, தசரத மகாராஜாவின் செல்வ மைந்தனாகவே அறிந்து பக்தி செய்து வந்தேன். இப்போது அவர் 12 கலைகளுடன் கூடிய அவதாரம் என்று அறிந்தேன். இவ்வளவு பெரியவரா அவர்? தாங்கள் இப்போது புதிய விஷயத்தைக் கூறிப் பேருதவி செய்துவிட்டீர்!" (அதாவது, ஸ்ரீகிருஷ்ணன் 16 கலை உடைய பூர்ண அவதாரம் என்ற விஷயம், அவர் காதில் விழவே இல்லை. அந்த அளவு அவருக்கு 'அநன்ய நிஷ்டை'.)

பகவானிடம் பக்தர்களுக்குப் பலவிதமான பாவங்கள் (எண்ணங்கள்) தோன்றுகின்றன. சிலர், இராமபிரானை தசரதரது மடியில் விளையாடும் ராமலலா என்கின்றனர். அவரை அரசர்களுக்கரசரான இராமசந்திரனாகப் பார்க்கவில்லை. சில பக்தர்கள், 'எனக்கு இஷ்டதெய்வம் பாலகிருஷ்ணன், நந்தனின் மகன்' என்கின்றனர். இத்தகைய பக்தர்கள் தனது ராமலலாவிற்கோ, நந்தலாலாவிற்கோ பெரியோர்களைக் கொண்டு ஆசீர்வாதம் செய்யச் சொல்கின்றனர். பகவானும் இதையே மிகவும் விரும்புகிறார். அதாவது, பக்தர்களின் பார்வை பகவானுடைய பெருமைகளின் மீது செல்வதில்லை.

"கண்ணன் விளையாடும் பிருந்தாவனப் புழுதியைச் சிறிதாவது பெறுபவர்கள் கையில், நான்குவிதமான முக்தியும் கிட்டிவிடுகிறது. இத்தகைய பெருமை வாய்ந்த தூசியை அன்னை யசோதை குப்பையாகப் பெருக்கி வெளியே வீசி விடுகிறாள். அன்னை யசோதைக்கு அந்த † நான்குவித முக்தியும் புல்லுக்குச் சமம்." முக்தி யாருக்கு வேண்டும்?

† ஸாலோக்யம், ஸாரூப்யம், ஸாமீப்யம், ஸாயுஜ்யம் என்ற நான்குவித முக்திகள்.

அவளது கருத்தெல்லாம் கண்ணனிடமே! அவனது பெருமை, ஐசுவரியம் – இவற்றில் அவளுக்கு ஈடுபாடு இல்லை.

சாதுக்கள் கூறுவது— "பகவானுடன் சேரும்போது, நம்முடன் வேறு எந்தப் பொருளும் இருக்கக் கூடாது. மற்றொன்றின் நட்புடன் நாம் சென்றோமேயானால், பகவானுடன் முழுமையாக நாம் கலக்க முடியாது. இறைவனைக் கூடும்போது மனம், புத்தி, கல்வி, பணம் முதலிய சுமைகளை, நம்முடன் கொண்டிருப்போமேயாகில், அது தடையாக அமையும். தடையுடன் கூடும்போது முழுமையான சேர்க்கை ஏற்படாதல்லவா? துணியோ, மாலையோ எதுவாயினும் ஒரு தடையிருப்பின் பூர்ணமாக எம்பெருமானைக் கூடியதாக ஆகாதல்லவா? இவ்விதமே நம்முடையது என்று எதிலும் ஈடுபாடு கொள்ளாமல் தூய்மையான நம்மை, இறைவனிடம் சேர்க்கும்போது ஏற்படும் ஆனந்தம் தெய்விகமானதாக இருக்கும்."

ஒரு மகாத்மாவிற்கு வயலில் வேலை செய்து கொண்டிருந்த, பிருந்தாவனவாசியான ஓர் ஆயனைச் சந்திக்க நேர்ந்தது. அந்த இடையன் மிகுந்த பக்தி நிறைந்தவன். மகாத்மா அவனைப் பார்த்து, 'நீ என்ன செய்கிறாய்?' எனக் கேட்டார். அவன், 'நான், எனது செல்வமான கண்ணனுக்காக வேலை செய்கிறேன்' என்றான். அவர், 'நான் பகவானது அநன்ய பக்தன், நீ எப்படி?' என்றார். அதற்கு அவன், 'நான் பனன்ய பக்தன்' என்றான். மகாத்மா கேட்டார், 'பனன்ய பக்தன் என்றால் என்ன?' அதற்கு அந்த இடையன், 'அநன்ய பக்தன் என்றால் என்ன?' என்றான். மகாத்மா கூறினார், 'எவன் சூரியன், சக்தி, கணபதி, பிரும்மா முதலிய யாரையும் கவனிக்காமல் கண்ணனை மட்டும் உபாசிக்கிறானோ, அவனே அநன்ய பக்தன்.' அப்போது அந்த ஆயன், 'சாமி! நான் அந்த தெய்வங்களின் பெயரைக்கூடக் கேட்டதில்லை. நான், இதைத் தெரிந்து கொண்டு என்ன செய்யப் போகிறேன், தெரியாவிட்டால்தான் என்ன? இதன் விஷயமே எனக்குத் தெரியாது. ஆதலால், நான் பனன்ய பக்தன்' என்றான். இவ்விதம் பிரம்மம், ஆத்மா, ஸகுணம், நிர்குணம், ஸாகாரம், நிராகாரம் முதலிய விஷயங்களில் சரணாகத பக்தனது கவனம் செல்லக் கூடாது.

கோகுலத்தில் ஒரு சமயம் ஒரு சாது கிணற்றடியில் ஒருவருடன் பிரம்மம், பரமாத்மா, ஜீவாத்மா – இவை பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். ஒரு கோபி தண்ணீர் எடுக்க, தன் தோழியுடன் அங்கு வந்தாள். அவள் காது கொடுத்து சாதுவின் வார்த்தையைக் கேட்டாள். அவள் தன் தோழியைப் பார்த்து, "தோழி! பிரம்மம் என்று கூறினாரே, அது என்ன?" அவள் கூறினாள்— "நம் கண்ணனுடைய அக்கம்பக்கத்து மனிதர் களாகவோ, உறவினர்களாகவோ இருக்கக்கூடும், நமக்குத் தெரியாது. இந்தக் கண்ணனின் வலையில் யார்தான் சிக்கவில்லை! அவர்களுக்கு இது பற்றி எல்லாம் தெரியும். நமக்கு நந்தனின் செல்வன்தான் தெரியும். ஏதாவது வேலை உண்டென்றால் நந்தனிடமோ, கிரிராஜ் கோவர்தனரிடமோ கூற வேண்டும். (அதுவும் கண்ணனைப் பற்றியே.) 'பெரியவரே! தயவு செய்யுங்கள். கண்ணன் அறியாப்பிள்ளையாக இருக்கிறான். அவனுக்கு எதுவும் தெரியவில்லை. நல்ல புத்தி சொல்லுங்கள். இதுதான் எங்களது வேண்டுகோள்.'

ஏ தோழி! கண்ணனிடமிருந்து நமக்கு என்ன வேண்டும்? அந்தக் கண்ணனே நம்முடையவன். வேறு என்ன வேண்டும்? நாமும் தனியாக இருக்கிறோம்; நம்மிடமும் எதுவும் கிடையாது. கண்ணனும் தனியாக இருக்கிறான், இடுப்பில் துணிகூட இல்லாமல். இவனிடமிருந்து வேண்டுவது என்ன? அவனையேதான்." (இப்படிக் கண்ணனையன்றி எதையும் அறியாதவர்கள், கோபிகள். இதுவே அநன்ய பக்தி. பகவானது பெருமையை அவர்கள் நோக்குவதே இல்லை.)

யசோதை பலராமனிடம் கூறுகிறார்— "பலராமா! இந்தக் கண்ணன் ஏதுமறியாதவன். இவன் மாடு மேய்க்கும்போது காட்டில் அதிக தூரம் போய்விடாதபடி நீ கவனித்துக் கொள்." உடனே பலராமன், "அம்மா! இந்தக் கண்ணன் மிகவும் குறும்புக்காரன். என்னுடன் கூடவே காட்டில் வந்து கொண்டிருப்பவன், அப்போது ஏதாவது பாம்புப்புற்றைக் கண்டால் உடனே கையை விடுகிறான். அதிலிருந்து பாம்பு கடித்தால் என்ன ஆகும்!" என்று புகார் கூறுவார். இதற்கு

யசோதை, "குழந்தாய்! இந்தக் கண்ணன் மிகச்சிறியவன், நீ பெரிய பையன். ஆகையால், நீதான் இவனைக் கவனித்துக் கொள்ள வேண்டும்" என்று கூறுவார். பலராமனும், மற்ற ஆயர் சிறுவர்களும் அது முதற்கொண்டு கண்ணனைக் கவனித்துக் கொண்டார்கள். யசோதையிடமும், இந்தச் சிறுவர்களிடமும் ஒருவர், "உங்களுடைய கண்ணன் இந்த உலகையே காக்கும் கடவுளாவார்" என்று கூறினால், "எங்கள் கண்ணனா? எங்களது குட்டிக் கண்ணன் இவ்வளவு பெரிய உலகை எவ்விதம் காப்பான்?" என்பர்.

ஒரு சமயம் சாது ஒருவர், ஒரு கோபியுடன் பேசிக் கொண்டிருந்தார். பேச்சினிடையே அவர், "கண்ணன் எவ்வளவு ஐசுவரியமும் மாதுர்யமும் உடையவன் தெரியுமா? அவனிடம் ஐசுவரியத்தின் கருவூலமே இருக்கிறது" என்று கூறினார். அப்போது அந்த கோபி, "அந்த கருவூலத்தின் சாவி எங்களிடம்தான் உள்ளது. அவனிடம் என்ன இருக்கிறது? ஏதுமில்லை. அவனிடம் யாராவது, ஏதாவது வேண்டுவார் களேயாகில் எங்கிருந்து கொடுப்பான்? ஆகவே, யாருக்காவது ஏதாவது வேண்டுமேயாகில் கண்ணனிடம் செல்ல வேண்டாம். அவனைத் தொந்தரவு செய்யாதீர்கள். அவனையே சரணடைய விரும்பினால் மட்டும் அவனிடம் செல்லுங்கள்" என்றாள். ஆபத்து, துயரங்கள் ஏற்படும்போதுகூட, 'எனக்குச் சிறிது உதவி செய்; என்னைக் காப்பாற்று' என்று பகவானைத் தொழும் எண்ணம் வரக்கூடாது. அத்தகையவர்களே உண்மையாக அவனைச் சரணடைந்தவர் ஆவர். ஸ்ரீராமசரிதமானசத்தில் (2/131) ஸ்ரீராமரிடம் வால்மீகி முனிவர்— "எவ்வித ஆசையுமின்றி, தங்களிடம் இயல்பாகவே பிரேமை செய்யும் மெய்யன்பர்களின் உள்ளமே, தாங்கள் வசிக்கத் தகுந்த இடம்" என்று கூறுவதாகக் காணப்படுகிறது.

எதையும் விரும்பாமல் பகவானையே நேசிக்கும்போது, இயல்பான அன்பு இறைவனிடம் ஏற்படுகிறது. எவரிடத்தில் விருப்பங்களே இல்லையோ, அவனது இதயம் இறைவனுக்குப் பெரும் வசதிகள் நிரம்பிய மாளிகை. ஏதோ ஒன்றை விரும்பிப் பழகும்போது தூய்மையான அன்பு எவ்விதம் ஏற்பட முடியும்?

அங்கு ஆசை, மோகம், சுயநலம் – இவையே இருக்கும்.

கண்ணன் விஷயமாக கோபிகள் எச்சரிக்கை செய்து கூறும் கீழ்வரும் சுலோகத்தைக் காணுங்கள்—

மா யாத பாந்த$_2$ா: பதி$_2$ பீ$_4$மரத்$_2$யா
தி$_3$கு$_3$ம்ப$_3$ர: கோऽபி தமாலநீல: ।
விந்யஸ்தஹஸ்தோऽபி நிதம்ப$_3$பி$_3$ம்பே$_3$
தூ$_4$ர்த: ஸமாகர்ஷதி சித்தவித்தம் ॥

''வழிப்போக்கர்களே! இந்த பாதை வழியே செல்லாதீர். இது பயம் நிறைந்தது. அங்கே தனது இடுப்பில் இரு கைகளையும் வைத்துக் கொண்டு, தமால மரம் போன்ற நீலவர்ணத்துடன் இடுப்பில் துணிகூட இல்லாமல் ஒரு பையன் நிற்கிறான். ஒன்றும் தன்னிடமில்லாமல் நிற்பதுபோல் தோன்றினாலும், வழியே செல்பவர்களின் மனமாகிய செல்வத்தைத் திருடாமல் விடுவதில்லை, அந்த உள்ளம் கவர் கள்வன்.''

கோபிகள் கார்வண்ணனான கண்ணனருகே செல்ல வேண்டாமென்பதன் பொருள், அவனிடம் சென்று முழுமையாக நம்மை அவனோடு சேர்த்துவிட விருப்பமானால் செல்லலாம். உலகத்தில் நன்றாக வாழ விரும்பினால் அந்தப் பக்கம் செல்லக் கூடாது. கிருஷ்ணன் என்ற பெயருக்கே 'அனைவரையும் ஈர்க்கக் கூடியவன்' எனப் பொருள். ஒருமுறை தன்னிடம் இழுத்தவர்களை அவன் விடுவதே இல்லை. அவனைத் தெரிந்து கொள்ளாமல் இருக்கும்வரைதான் நிம்மதியாக உலக வாழ்க்கை வாழ முடியும். அவனை அறிந்து கொண்டால், உடனேயே உலக வாழ்க்கைக்கான முயற்சிகள் முடிந்துவிடும். மூவுலகிலும் செய்ய வேண்டியது ஏதுமின்றி ஆகிவிடும்!

நாராயணனை அறிபவனுக்கு எந்த ஒரு செயலும் பொருளற்றதாகி விடுகிறது. அவனைத் தவிரப் பிறிதொன்றில் நாட்டம் கொள்ளாத நிலை ஏற்பட்டுவிடுகிறது.†

† *விஹாய காமாந் ய: ஸர்வாந் புமாம்ஶ்சரதி நி:ஸ்ப்ருஹ: ।*
நிர்மமோ நிரஹங்கார: ஸ ஶாந்திமதி$_4$க$_3$ச்ச$_2$தி ॥
(ஸ்ரீமத் பகவத்கீதை 2/71)

சரணாகத பக்தன் பஜனைகூடச் செய்வதில்லை. மாறாக, அவனிடம் இயல்பாகவே நாம கீர்த்தனம் நடைபெறுகிறது. இறைவனின் திருநாமங்கள் இயல்பாகவே இனிக்கின்றன. அவற்றில் ஆசை இருக்கிறது. எவ்விதம் மூச்சுவிடுதல் என்பது, நம் முயற்சியின்றி இயல்பாக அமைந்துவிட்ட ஒன்றோ, அது இல்லாமல் நாம் உயிர்வாழ முடியாதோ, அவ்விதமே பகவந் நாமம் சொல்லாமல் சரணாகதன் இருக்க முடியாது. ஆகவே, சாதாரண பக்தர்கள்போல் பஜனை செய்வது என்று தனியான ஒரு செயல் அவனுக்கில்லை. எவனிடத்தில் அனைத்தையும் ஒப்படைத்துவிட்டானோ, அவனை மறப்பதில் துயரம் ஏற்படும். ***'தத்$_3$விஸ்மரணே பரமவ்யாகுலதேதி' (நாரத$_3$ப$_4$க்திஸூத்ரம் 19).*** இத்தகைய பக்தனிடம் 'மூவுலக சாம்ராஜ்யத்தையும் தருவேன், அரை க்ஷணம் பகவானை மறந்திரு' என்றால், அது அவனால் இயலாத செயல். இதை ஸ்ரீமத் பாகவதத்தில் காணலாம்—

த்ரிபு$_4$வநவிப$_4$வஹேதவேऽப்யகுண்ட$_2$-
ஸ்ம்ருதிரஜிதாத்மஸுராதி$_3$பி$_4$ர்விம்ருக்$_3$யாத் ।
ந சலதி ப$_4$க$_3$வத்பத$_3$ாரவிந்த$_3$ால்-
லவநிமிஷார்த$_4$மபி ய: ஸ வைஷ்ணவாக்$_3$ர்ய: ॥

(ஸ்ரீமத் பாகவதம் 11/2/53)

மேலும், ஸ்ரீமத் பாகவதத்தில் இடம்பெறும்,

ந பாரமேஷ்ட்$_2$யம் ந மஹேந்த்$_3$ரதி$_4$ஷ்ண்யம்
ந ஸார்வபெ$_4$ளமம் ந ரஸாதி$_4$பத்யம் ।
ந யோக$_3$ஸித்$_3$தீ$_4$ரபுநர்ப$_4$வம் வா
மய்யர்பிதாத்மேச்ச$_2$தி மத்$_3$விநாந்யத் ॥

(ஸ்ரீமத் பாகவதம் 11/14/14)

என்ற சுலோகம் பகவானே தம் பக்தனைப் பற்றிக் கூறுவதாக அமைந்துள்ளது. "என் பக்தன் என்னைத் தவிர, பிரும்ம பதவி, இந்திர பதவி, உலகாளும் சக்கரவர்த்தி பதவி, பாதாளத்தை ஆள்வது, அஷ்டமகாசித்திகளைப் பெறுவது – இவை மட்டுமின்றி, முக்தியையும்கூட விரும்ப மாட்டான்."

ஸ்ரீராமசரிதமானசத்தில் பரதன் கூறுகிறார்— "அறம், பொருள், இன்பம், வீடு – இவை நான்கும் எனக்குச்

சுவைக்கவில்லை. 'பிறவிதோறும் ராம பாதாரவிந்தத்தில் பக்திவேண்டும்' என்பதே நான் கேட்கும் வரம், பிறிதொன்றில்லை.''

'அன்பு' என்பதில் உள்ள சிறப்பு

செயல்களனைத்தையும் பகவானுக்கு அர்ப்பணம் செய்வதால், உலகிலிருந்து நிரந்தரமான விடுதலை ஏற்படுகிறது. அவ்விதம் முழுமையாக பகவானிடத்திலேயே ஈடுபாடு கொண்டிருப்பின், பகவானுடன் பிரியாத தொடர்பு ஏற்படும். இவ்வாறு பக்தன் எப்போதும் அவருடனேயே சேர்ந்திருக்கும் போது, பக்தி ரஸத்தினால் சேர்த்தி, சேர்த்தியிலேயே பிரிவு, பிரிவிலேயே சேர்த்தி, பிரிவிலேயே பிரிவு என்ற நான்கு மனோநிலைகள் ஏற்படுகின்றன.

அதாவது, ஸ்ரீகிருஷ்ணனும் ராதையும் ஒருவருடன் ஒருவர் சேர்ந்திருக்கின்றனர். இதை எப்போதும் சேர்ந்திருப்பதன் சேர்த்தி (நித்யயோகத்தில் யோகம்) எனலாம். கண்ணனுடன் சேர்ந்திருக்கும் போதே தேவிக்கு, நம் பிரியதமனான கண்ணன், நம்மைவிட்டு எங்காவது சென்றுவிடுவாரோ என்றும், 'பிரியதம! தாங்கள் எங்கே சென்றுள்ளீர்கள்?' என்று கண்ணனுடன் இருக்கும்போதே பிரிவின் பயத்தினால் புலம்புவதும் ஏற்படும். இதுவே சேர்த்தியிலேயே பிரிவு (நித்யயோகத்தில் வியோகம்) ஆகும். பிரிந்திருக்கும்போது கண்ணன் எதிரில் இல்லை. ஆயினும், மனத்தில் அவரைப் பற்றிய தீவிர எண்ணத்தினால், மனத்தில் அவர் தெரிந்து கொண்டே இருப்பார். இது பிரிவில் சேர்த்தி (வியோகத்தில் யோகம்) ஆகும். கண்ணன், சிறிது நேரத்திற்குப் பிரிந்து சென்றுள்ளார். அதற்குள் கண்ணனைப் பிரிந்து வெகுநாட்களானதாகவும், 'கண்ணன் கிடைக்க மாட்டாரோ, என் செய்வேன், எங்கு செல்வேன், எப்படிக் கூறுவேன்?'' என்றெல்லாம் ஏற்படும் எண்ணமே பிரிவில் பிரிவு (வியோகத்தில் வியோகம்) என்பதாகும்.

உண்மையில், இந்நான்கு நிலைகளிலும் பகவானுடன் ஏதோ ஒருவிதத்தில் சம்பந்தம் தொடர்ச்சியாகவே இருக்கிறது;

ஒருபோதும் பிரிவே கிடையாது; பிரிவு ஏற்படவும் முடியாது; அதற்கான எந்த வாய்ப்பும் கிடையாது. இப்படி எப்போதும் பகவானுடன் கலந்திருப்பதே பிரேமையாகும். பிரேமையில் அன்பு செய்கிற பிரேமியும், அன்பிற்குரியவரும் ஒன்றாகி விடுகின்றனர். அன்பை வெளிப்படுத்திக் கொள்ளவே, பக்தனுக்கும் பகவானுக்கும் இடையில் பிரிவு என்பது தெரிகிறது. இந்த அன்பு கணந்தோறும் வளர்கிறது. அன்பு செய்யும் இருவரும் சேரும்போது, அன்பன் முன்பு நம்மைவிட்டுப் பிரிந்து சென்றிருந்தார்; பிரிவு ஏற்பட்டது. இப்போது மறுபடியும் 'நம்மைப் பிரிந்து விடுவாரோ' என்ற எண்ணம் வரும்போது, சேர்த்தியில் திருப்தி ஏற்படுவதில்லை. 'நம்மைவிட்டுச் சென்றுவிடுவார்' என்ற விஷயத்திலேயே மனது உளைகிறது. இவ்விதமே இந்த அன்பு கணந்தோறும் வளர்கிறது.

இத்தகைய பிரேமையில் (அன்பில்) நான்குவிதமான ரஸம் உள்ளது. அவையாவன:– தாஸ்யம் (தொண்டு), ஸக்யம் (தோழமை), வாத்ஸல்யம் (தாய்மை), மாதுர்யம் (தலைவனாகக் கொளல்). இதில் தாஸ்யத்தைவிட ஸக்யம், ஸக்யத்தைவிட வாத்ஸல்யம், வாத்ஸல்யத்தைவிட மாதுர்யம் சிறந்தது. இதில் சிறப்பு எவ்விதமெனில், பகவானுடைய மகிமை–பெருமைகள் ஒன்றைவிட ஒன்றில் குறைந்து அறியப்படுகிறது என்பதே. ஆனால், இந்நான்கில் ஏதாவது ஒரு ரஸம் முழுமையைப் பெறுமாகில், மற்ற ரஸங்கள் குறைந்துவிட மாட்டா. அதாவது, எல்லா ரஸங்களும் ஒன்றிலேயே வந்துவிடும். தாஸ்ய ரஸம் முழுமையடையுமாகில், அதில் ஸக்யம், வாத்ஸல்யம், மாதுர்யம் என்ற மூன்றும் வந்துவிடுகின்றன.

இவ்விதமே, மற்ற ஒவ்வொரு ரஸமும் முழுமை அடையும்போது, அனைத்து ரஸங்களும் அந்த ஒன்றினில் கலந்து விடுகின்றன. பகவானோ பூரணர் (நிறைந்தவர்). அவரது அன்பும் பூரணமானது. அவரது அம்சமாக இருப்பதால் ஜீவனும் பூரணனே. குறைபாடு என்பது உலகாயதப் பொருட்களின் சம்பந்தத்தில்தான் வரும். ஆகவே, பகவானுடன் எவ்விதத்திலாவது பக்தி ஏற்படுமாயின், அது (ஜீவன்)

முழுமையாகிவிடும். அதில் குறைபாடு என்பதே இருக்காது. இதுவே (தாஸ்யம் முதலிய) பக்தி நெறிகள் முழுமை அடையும்போது, மற்ற பக்தியும் அதில் கலந்துவிடும் என்பதன் பொருள்.

'தாஸ்யம்' எனும் பக்தி நெறியில் பக்தன், பகவானைத் தனது யஜமானனாகக் கருதுகிறான்; தன்னை அவருடைய சேவகனாகவும் கருதுகிறான். தாஸ்ய பக்தன், தன் விஷயத்தில் பகவானுக்கு முழு உரிமை உள்ளதாயும், அவர் எப்படி விரும்புகிறாரோ அப்படி செய்யலாமென்றும், எத்தகைய நிலையில் வேண்டுமாயினும், அவர் விருப்பப்படி தன்னை வைக்கலாமென்றும், எத்தகைய வேலையையும் தன்னைச் செய்யச் சொல்லலாம் என்றும், பகவானுக்குத் தன்னிடத்தில் முழுமையான சுவாதீனம் இருப்பதால், பகவான் தன்னைக் கலக்காமலேயே தன் விஷயமாக எத்தகைய முடிவையும் எடுக்கலாம் என்றும் கருதுகிறான்.

'ஸக்யம்' (தோழமை) எனும் பக்தி நெறியில் உள்ள பக்தன், பகவான் எனது தோழன்; நான் அவருடைய தோழன் என்றும், அவர் எனது அன்பிற்குரியவர்; நான் அவனது அன்பிற்குரியவன் என்றும், எனக்கு அவர் மீது முழு உரிமை உள்ளது; அவருக்கும் என் மீது முழு உரிமை உள்ளது என்றும், நான் அவருடைய கருத்துக்களை மதிப்பது போலவே, எனது வார்த்தைகளும் அவரால் ஏற்கத்தக்கவை என்றும் எண்ணி, அன்பு செலுத்துகிறான்.

'வாத்ஸல்யம்' எனும் தாய்க்கும் சேய்க்கும் உள்ள அன்பின் நெருக்கத்தில் பகவானை பக்தி செய்யும் பக்தன், தான் அவருக்குத் தாய் அல்லது தந்தை என்றும், அவர் தனது குழந்தை என்றும், ஆகவே அவரைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு தன்னுடையது என்றும், எப்போதாவது அவர் (பகவான்) தமது ஆரோக்கியத்திற்கு ஆகாததைச் செய்வாரேயாகில், அப்படிச் செய்யாமல் பார்த்து கொள்ளும் பொறுப்பும் தனக்கு இருப்பதாகவும் கருதுவான். ஆனிரை

மேய்க்கச் செல்லும் கண்ணனைப் பார்த்துக் கொள்ளும்படி, யசோதை பலராமனிடம் கூறியதே இதற்கு எடுத்துக்காட்டு.

'மாதுர்யம்' எனும் பக்தி, பொதுவாகத் தலைவன்–தலைவியினது உறவாகும். ஆனால், பகவானிடம் செய்யப்படும் மாதுர்யம் (இனிமை) எனும் பக்திரஸத்தில் அத்தகைய நியமம் இல்லை. இனிமையே உருவான பரமாத்மாவில், இனிமையான அன்பு செய்து, அன்பர்கள் இருவரும் ஒன்றுபட்டுச் சிறிதும் வேற்றுமையின்றித் தனித்தன்மை இழப்பதே மாதுர்யம். ஆகவேதான் தாஸ்யம், ஸக்யம் முதலிய எந்தவித பக்தியும் முழுமையடையும்போது, அதில் மாதுர்யம் வந்து விடும் என்று முன்பு கூறப்பட்டுள்ளது. பக்தியின் எல்லா நிலையிலும், அதன் முதிர்ச்சியில் மாதுர்ய பிரேமை இருக்கிறது. இந்த மாதுர்ய பக்தியில், பக்தனுக்கு பகவானது பெருமையில் விசேஷமான எண்ணம் உண்டு. ஆகவே அவன், பகவானுடன்கூடத் தன்னைப் பிரியாத தன்மையனாகக் கருதுகிறான். வேற்றுமையற்றதனாலேயே, அவர் பொருட்டுச் சுகத்தை அளிக்கும் பொருட்களைச் சமர்ப்பிக்கக் எண்ணுகிறான். அவருக்கு ஓய்வளிக்க விரும்புகிறான். அவருக்கு 'எவ்விதத்திலும் கஷ்டம் வரக் கூடாது' என்று எண்ணுகிறான். ***'தத்ஸுக ஸுகித்வம்'*** – 'அவரது சுகமே தன் சுகம்' என்று கருதுகிறான். இவ்விதம் இந்த பக்தனது நிலை அமைகிறது.

பிரேமரஸம் என்பது உலகியலுக்கு அப்பாற்பட்டது. அது சின்மயமானது. அதை அனுபவிப்பவன் பகவானாகவே ஆகியுள்ளான். பிரேமையில் பிரேமை செய்பவன், பிரேமை செலுத்தப்படுபவன் என்ற இரண்டு உருவமுமே சின்மயமானவை. அன்பு செலுத்துபவன் ஒரு சமயம் அன்பு செலுத்தப்படுபவனாகவும், அன்பு செலுத்தப்படுபவன் ஒரு சமயம் அன்பு செலுத்துபவனாகவும் ஆகிறான். ஆகவே ஒரே சின்மய தத்துவமே, பிரேமரஸத்தை அனுபவிக்க இரு உருவங்களாக ஆகியுள்ளது.

பிரேமையின் தத்துவத்தை அறியாததாலேயே சிலர் உலகாயதமான காமத்தையே பிரேமை என்று எண்ணி

விடுகின்றனர். இது மிகவும் தவறு. காமம் எண்பத்து நான்கு லட்சம் வகையான உயிரினங்களிலும் உள்ளது. அதிலும் பூதப்பிரேதபிசாசங்களில் அதிகம் காணப்படுகிறது. ஆனால், பிரேமை செய்பவனோ ஜீவன்முக்த மகாபுருஷன்!

காமத்தில், தான் நலம் பெறவேண்டும் என்ற எண்ணமே அதிகம்; பிரேமையில், நலம் அளிக்க வேண்டும் என்பதே அதிகம். காமத்தில், தன்னுடைய புலன்களைத் திருப்தி செய்ய அந்தந்த சுகங்களை அனுபவிக்கும் எண்ணமுள்ளது; பிரேமையில், தான் நேசிப்பவரைச் சுகப்படுத்த வேண்டும், அவருக்குச் சேவை செய்து கொண்டிருக்க வேண்டும் என்ற எண்ணமுள்ளது. காமம் சரீரத்தைப் பற்றியது; பிரேமை மேற்பார்வைக்குச் சரீரத்தை ஒட்டியதாகத் தோன்றினாலும், உண்மையில் சின்மய தத்துவத்தில் உள்ளது. காமத்தில் மோகம் எனும் மூடத்தனமுண்டு; பிரேமையில் மூடத்தனம் சிறிதும் கிடையாது. காமத்தில் சம்சார துக்கம் நிறைந்திருக்கிறது. பிரேமையில் முக்தி, முக்தியினும் மேம்பட்ட ஆனந்தம் நிறைந்துள்ளது.

காமத்தில், ஜடமான உடல்–புலன்களுக்கு முக்கியத்துவம்; பிரேமையில், சின்மயமான ஜீவஸ்வரூபத்திற்குத்தான் முக்கியத்துவம். காமத்தில், அடிமைத்தனம் உள்ளது; பிரேமையில், அடிமைத்தனத்தின் சிறு அம்சம்கூட இல்லாமல், பூரண சுதந்திரத்தன்மை உள்ளது. காமத்தில் ஆசை இருக்கிறது; பிரேமையில் தியாகம் இருக்கிறது. காமத்தில், மற்றவர் தனக்கு வசமாக வேண்டும் எனும் புத்தி உள்ளது; பிரேமையில், நாம் வசமாகி இருக்க வேண்டும் எனும் புத்தி உள்ளது. காமத்தில், ஒருவன் அனுபவிக்கும் பொருட்களுக்கு அடிமையாகி விடுகிறான்; பிரேமையில் ஸ்வயம் பகவான், பக்தனுக்கு அடிமையாகிறார்.

காமத்தின் ரஸம், வறண்டு போகக் கூடியது; பிரேமரஸம், வளர்ந்து கொண்டே இருக்கக் கூடியது. காமம் துயரத்தில் உண்டாவது; பிரேமை தெளிவில் உண்டாவது. காமத்தில், தன்

மகிழ்ச்சியே குறிக்கோள். பிரேமையில், பக்தனது அன்பிற்குரிய பகவானது மகிழ்ச்சியே குறிக்கோளாகிறது. காமப்பாதை நரகத்திற்கு இட்டுச் செல்கிறது; பிரேம மார்க்கம் பகவானிடம் இட்டுச் செல்கிறது. காமத்தில் இரண்டுபட்டு இருவரே இருக்கின்றனர். அதாவது, பேத மனப்பான்மையுடன் இருப்பர். அந்த பேதம் ஒருபோதும் நீங்காது; பிரேமையில் ஒன்றாக ஆகிய இருவர் உள்ளனர். ஒருபோதும் பேதம் தலைதூக்காது.

த்$_3$வைதம் மோஹாய பே$_3$ாத$_4$ாத்ப்ராக்$_3$ஜாதே பே$_3$ாதே$_4$ மநீஷயா ।
ப$_4$க்த்யர்த$_2$ம் கல்பிதம் த்$_3$வைதமத்$_3$வைதாத$_3$பி ஸுந்த$_3$ரம் ॥
பாரமார்தி$_2$கமத்$_3$வைதம் த்$_3$வைதம் ப$_4$ஜநஹேதவே ।
தாத்$_3$ருஶீ யதி$_3$ ப$_4$க்தி: ஸ்யாத்ஸா து முக்திஶதாதி$_4$கா ॥

''ஞானம் ஏற்படுவதற்கு முன் த்வைதம் (பேதம்) மோகத்திற்காக அமைகிறது. ஆனால் ஞானம் ஏற்பட்ட பிறகு, பக்தியின் பொருட்டு பேதம் எழுகிறது. இந்த பேதம், அத்வைதம் எனும் ஒன்றாகிய நிலையினும் அழகியது. அத்வைதம் என்பது பாரமார்த்திகம் – உண்மை நிலை. அதைக் கண்டபின் ஏற்றுக்கொள்ளும் பேதம் பகவானை பக்தி செய்வதற்காக. அத்தகைய பக்தி ஏற்படுமாகில், அது நூறு முக்தியைக் காட்டிலும் மேல்!''

பக்தன் சிறிது வேற்றுமை கொண்டு, பகவானிடம் பக்தி செய்தபோதிலும், சம்சாரிகளான மக்களைப்போல் வேற்றுமையுலகில் சிக்குவதில்லை. இத்தகைய அன்புதான் சரணாகதி – சரணாகதனது பக்தி. அவன் பகவானிடம் உள்ள மகிமை–பெருமைகளைக் கணிப்பதில்லை. பகவானிடம் எதையும் எதிர்பார்ப்பதில்லை. பகவானுக்காகவே பகவானை பூஜிப்பான். இதுவே சரணாகதியின் ரகசியம்.

॥ ஓம் தத் ஸத் ॥

Gita Press, Gorakhpur

Our Publications, Kalyan and Kalyana-Kalpataru available at :

Gorakhpur — 273005	Gita Press—P.O. Gita Press website:www.gitapress.org / e-mail:booksales@gitapress.org	✆ **(0551) 2334721; 2331250; Fax 2336997**
Delhi — 110006	2609, Nai Sarak	✆ **(011) 23269678; Fax 23259140**
Kolkata — 700007	Gobind Bhavan-Karyalaya, 151, Mahatma Gandhi Road e-mail : gobindbhawan@gitapress.org	✆ **(033) 22686894; Fax 22680251**
Mumbai — 400002	282, Samaldas Gandhi Marg (Princess Street) Near Marine Lines Station	✆ **(022) 22030717**
Kanpur — 208001	24/55, Birhana Road	✆ **(0512) 2352351; Fax 2352351**
Patna — 800004	Ashok Rajpath, Opposite Women's Hospital	✆ **(0612) 2300325**
Ranchi — 834001	Cart Sarai Road, Upper Bazar	✆ **(0651) 2210685**
Surat — 395001	Vaibhav Apartment, Opposite Nutan Niwas, Bhatar Road e-mail : suratdukan@gitapress.org	✆ **(0261) 2237362, 2238065**
Indore — 452001	G-5, Shree Vardhan, 4 R.N.T. Marg	✆ **(0731) 2526516, 2511977**
Jalgaon — 425001	7, Bhim Singh Market, Near Railway Station	✆ **(0257) 2226393; Fax (0257) 2220320**
Hyderabad — 500095	41, 4-4-1, Dilshad Plaza, Sultan Bazar	✆ **(040) 24758311**
Nagpur — 440002	Shriji Kripa Complex, 851, New Etawari Road	✆ **(0712) 2734354**
Cuttack — 753009	Bhartiya Towers, Badam Badi	✆ **(0671) 2335481**
Raipur — 492009	Mittal Complex, Ganjpara Telghani Chowk	✆ **(0771) 4034430**
Varanasi — 221001	59/9, Nichibag	✆ **(0542) 2413551**
Haridwar — 249401	Sabjimandi, Motibazar	✆ **(01334) 222657**
Rishikesh — 249304	Gita Bhawan, P.O.-Swargashram e-mail : gitabhawan@gitapress.org	✆ **(0135) {2430122, 2432792**
Coimbatore — 641018	Gita Press Mansion, 8/1M, Racecourse	✆ **(0422) 3202521**
Bangalore — 560027	#15, 4th 'E' Cross, K.S. Garden, Lalbagh Road	✆ **(080) 22955190, 32408124**

Station-Stalls— **Delhi** (Platform No. 5-6); **New Delhi** (No. 16); **Hazarat Nizamuddin** [Delhi] (No. 4-5); **Kota** [Rajasthan] (No. 1); **Bikaner** (No. 1); **Gorakhpur** (No. 1); **Kanpur** (No. 1); **Lucknow** [N.E. Railway]; **Varanasi** (No. 4-5); **Mughal Sarai** (No. 3-4); **Haridwar** (No. 1); **Patna** (Main Entrance); **Ranchi** (No.1); **Dhanbad** (No. 2-3); **Muzaffarpur** (No. 1); **Samastipur** (No. 2); **Howrah** (No. 5 & 18 Both); **Kolkata** (No. 1); **Sealdah Main** (No. 8); **Asansol** (No. 5); **Cuttack** (No. 1); **Bhubaneshwar** (No. 1); **Ahmedabad** (No. 2-3); **Rajkot** (No. 1); **Jamnagar** (No. 1); **Bharuch** (No. 4-5); **Indore** (No. 5); **Vadodara** (No. 4-5); **Aurangabad** [Maharashtra] (No. 1); **Secunderabad** [A.P.] (No. 1); **Guwahati** (No. 1); **Kharagpur** (No. 1-2); **Raipur** [Chhattisgarh] (No. 1); **Bangalore** (No. 1); **Yesvantpur** (No. 6); **Hubli** (No. 1-2); **Sri Satya Sai Prashanti Nilayam** [South Central Railway] (No. 1) and **I.S.B.T. (Delhi)**

ISBN 81-293-0794-4

9788129307941

Retail Counters

Churu — Rishikul-Brahmacharyashram, Purani Sarak, **Rishikesh** — Muni Ki Reti, **Tirupati** —Shop No. 56, T.T.D. Mini Shopping Complex, **Berhampore** —Municipal Market Complex, Block-B, Stall No. 57 to 60, Ist Floor, **Gujrat**—Santram Mandir, Nadiyad.

Code 568▲